பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | கார்த்திகை 20 | வியாழக்கிழமை 06.12.2018 | கதிர் 31

### இது ரகசியம் அல்ல!

'சோழியன்குடுமிசும்மாஆடாது' என்பார்கள். தமிழ்க் கூட்டமைப் பின் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தை அவசரமா கக் கூட்டும் படி கொதித்தெழுந்தது ரெலோ. அதற்காக நேற்று முன்தினம் அந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. நாளை மாலையும் அது தொடர விருக்கின்றது. பக்கம் 02 »



# மைத்திரி துரோகி! பைத்தியக்காரர்!!

## நாடாளுமன்றத்தில் சரமாரியாக விளாசித் தள்ளினார் பொன்சேகா

கொழும்பு, டிசெ. 06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரவில் ஒன்றையும், பொழுது விடிந்ததும் வேறொன்றையும் கூறும் கொள்கையற்ற அரசியலை முன்னெடுத்து வருகின்றார் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. குற்றஞ்சாட்டினார். பக்கம் 11 »

## தமிழரசில் மற்றொரு ஜனாதிபதி சட்டத்தரணி



இலங்கைத்தமிழரசுக் கட்சியின் கொழும்புக கிளைத் தலைவரான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராஜா நேற்று ஜனாதிபதிசட்டத்தரணியாக நியமனம்செய்யப்பட்டார்.

ஜனாதிபதி மைத்திரி பால பக்கம் 02 »

## கருவுக்கு நோபல் பரிசு!

### ஐ.தே.க. பரிந்துரை



கொழும்பு, டிசெ. 06

அரசியல்சதிநடவடிக்கையால்நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிக்குள் ஜனநாயகத் தைப் பாதுகாப்பதற் பக்கம் 11 »

## நல்லதொரு தீர்ப்பை நீதிமன்றம் வழங்கும்

### ரிஷாத் பதியுதீன் நம்பிக்கை



கொழும்பு, டிசெ. 06

நீதிமன்றம் நல்லதொரு தீர்ப்பை வழங்கும் என்ற பூரண நம்பிக்கை தங் களுக்கு உள்ளதாக பக்கம் 11 »

## காருக்குள் கஞ்சா ஐந்து பேர் கைது!



வவுனியா, டிசெ. 06

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோண மலைக்குக் கொண்டு செல்லப்பட்ட 2 கிலோ கேரளக் பக்கம் 11 »

## ஜனநாயகம் தொடர்பில் பேச ரணிலுக்கு அருகதை இல்லை

### மைத்திரிபால மீண்டும் விளாசல்



கொழும்பு, டிசெ. 06

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை கடுமையாக விமர் சித்து நேற்று முன்தினம் பக்கம் 11 »

## சர்வாதிகாரப் போக்கின் உச்சநிலையில் மைத்திரி

### வவுணதீவுச் சம்பவம் இனவாதத்தைத் தூண்டிவிடும் சதி நடவடிக்கை என ஸ்ரீநேசன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 06

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் ஒன்றாக இணைந்து நின்று கோரினாலும் பெரும்பான்மைப் பலம் உள்ளவரை (ரணில் விக்கிரமசிங்க) பிரதமராக நியமிக்க முடியாது என்று ஜனாதிபதி மைத் திரிபால பக்கம் 11 »

## நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிரான மனுக்களை விசாரிக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றுக்கு இல்லை

### சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 06

நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிரான மனுக்களை விசாரிக்கும் அதிகாரம் உயர்நீதி மன்றுக்கு இல்லை எனச் சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய நேற்று மன்றில் தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதி பதி மைத்திரிபால பக்கம் 11 »



## ஜனாதிபதிப் பதவியைத் துறந்துவிட்டு விவசாயம் செய்யவுள்ளாராம் மைத்திரி!

கொழும்பு, டிசெ. 06

என்னை அதிகம் நெருக்கடிக்கு உள்ளாக் கினால், எனது ஜனாதிபதி பதவியை இராஜி நாமா செய்துவிட்டு, எனது பொலனறுவை விவசாயப் பண்ணைக்கு விவசாயம் செய்யச் சென்று விடுவேன் என்று ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன உணர்ச்சிவசப்பட்டுக் கூறி னார் எனத் தமிழ் முற் பக்கம் 11 »

## சரத் பொன்சேகாவிடமிருந்து 'பீல்ட் மார்ஷல்' பறிபோகும்?

### அதிரடிக்குத் தயாராகிறார் மைத்திரி!

கொழும்பு, டிசெ. 06

இலங்கையில் இறுதிக் கட்டப் போரை வழிநடத் திய இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா வுக்கு வழங்கப்பட்டுள்ள 'பீல்ட் மார்ஷல்' என்ற உய ரிய பட் பக்கம் 11 »

## ஜனாதிபதி மைத்திரிபால பதவி துறக்கவேண்டும்

### ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாக பதவி துறந்து, வீட்டுக்குச்செல்லவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட பக்கம் 11 »

## ஆட்சியைக் கைப்பற்றினால் '19' இல்லாதொழிக்கப்படும்

### கூறுகிறார் லக்ஷ்மன் யாப்பா

கொழும்பு, டிசெ. 06

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெரும்பான்மை அதிகாரத்தை கைப்பற்றினால் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் மாற்றம் ஏற்படுத்தப் பக்கம் 11 »

## எழுத்து மூல ஒப்பந்தங்களின்றி ஐ.தே.முவை ஆதரிக்காது ரெலோ

### சிவாஜிலிங்கம் திட்டவட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 06

எழுத்துமூல ஒப்பந்தங் கள்இன்றித்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு,ஐக்கியதேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்கக்கூடாது. அவ்வாறு ஒப்பந் பக்கம் 02 »

## இரு பொலிஸார் சுட்டுக் கொலை அரசமைப்பதற்கான சதி முயற்சி

### சபையில் சாள்ஸ் எம்.பி. காட்டம்

கொழும்பு, டிசெ. 06

அரசமைக்கச் சதி திட் டம்தீட்டுவோரின் சதிமுயற் சியே மட்டக்களப்பில் இரண்டுபொலிஸார்கொல லப் பக்கம் 02 »

# ஜனாதிபதி மைத்திரிபாலவின் குடியுரிமையைப் பறிக்கலாம்!

## கூறுகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, டிசெ. 06

ஜனாதிபதி அரசமைப்பை மீறிச் செயற்பட்டுவிட்டார். அவர் குற்றவாளி என்பது இப்போதே உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது. நீதிமன்றம் ஜனாதிபதிக்கு எதிரான தீர்ப்பு ஒன்றை வழங்கும் பட்சத்தில் அவர் குற்றவாளி என்பது சட்டபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுவிடும். ஆகவே ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை மட்டுமல்ல அவரது குடியுரிமையை பறிக்க முடியும் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார நாற்காலியில் மைத்திரி மட்டுமல்ல ரணில் விக்கிரமசிங்க அமர்ந்தாலும் நாட்டை நாசமாக்குவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி முன்னெடுத்த அரசியல் மாற்றத்துடன் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பான மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ நேற்றுக் கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவருமாறு மட்டுமல்ல அவரது குடியுரிமையைப் பறிக்கவும் முடியும். அவர் செய்துள்ள தவறு சாதரணமானது அல்ல. அதனால் தான் ஜனாதிபதி அச்சத்தில் தடுமாறுகின்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் சிலர் ஜனாதிபதியின் மீது நம்பிக்கை வைத்து அவரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டுமொரு பிரேரணையைக் கொண்டு வந்துள்ளனர்.

இதில் முதல் சரத்து நீக்கப்பட்டுள்ளது. இதனை எவ்வாறு நீக்க முடியும்? இவர்கள் டீல் ஒன்றைப் போட்டுவிட்டனர். ஜனாதிபதியின் கதைக்கு இணைங்கி இவர்கள் இதனை செய்துள்ளனர். அதனைச்செய்ய முடியாது. அவர்குற்றவாளியாகிவிட்டார். இப்போதும் ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதியுடன் டீல் போட்டுக்கொண்டு செயற்படுகின்றனர். அன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் இன்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே – என்றார். (ஐ)

# ரவீந்திர விஜேகுணரத்னவுக்கு கடும் நிபந்தனையுடன் பிணை

கொழும்பு, டிசெ. 06

முன்னாள் கடற்படைத்தளபதியும் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியுமான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைப்பிணையில் விடுவிக்கக் கொழும்பு கோட்டை நீதிவான் ரங்க திசநாயக்க நேற்று உத்தரவிட்டார்.

10 லட்ச ரூபா சரீரப் பிணை இரண்டில் இவர் விடுவிக்கப்பட்டுள்ளார்..

எந்தவொரு முறையிலும் விசாரணைகளுக்கு தடையேற்படுத்த வேண்டாம் என்றும், தனது பதவியைப் பயன்படுத்தி சாட்சியாளர்களை அச்சுறுத்தல் விடுக்கவேண்டாம் என்றும், குறிப்பாக லெப்டினன்ட் கொமாண்டர் கலகமகே லக்சிறி என்ற அதிகாரிக்கு அச்சுறுத்தல் விடுக்க வேண்டாமெனவும் ரவீந்திரவுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் அறிவிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகுமாறும் பிணையின் நிபந்தனைகளை மீறினால் பிணை நிபந்தனைகளை இரத்துச்செய்துவிட்டு மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்படுவார் என்றும் நீதவான் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏதோ ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி அமைப்பதற்கு கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு எதேச்சாதிகாரமாக – தம்பாட்டில் – முடிவு செய்துவிட்டது என்றும் –

கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டாமல் அப்படி முடிவு செய்தது தவறு என்றும் –

அதனால்தான் அந்தக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டும்படி வலியுறுத்தப்படுகின்றது என்றும் –

ரெலோ தரப்பில் ஆரவாரம் காட்டப்பட்டது.

ஆனால், சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு அளிக்கும் விடயம் பேசப்பட்டாலும் இன்னொரு விடயம் அதிகம் வலியுறுத்தப்பட்டது.

அண்மைக் காலமாக – அடிக்கடி – இப்படிக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டும்படி வலியுறுத்துவது வழமையாகிவிட்டது. ஏதேனும் தேசிய மட்டப் பிரச்சினை வராதா, ஒருங்கிணைப்புக் குழுவை அவசரமாகக் கூட்டச்சொல்லிவற்புறுத்தச்செய்வதற்கு வாய்ப்புக் கிட்டாதா என்று ரெலோ பார்த்திருப்பது போல விடயங்கள் அரங்கேறுகின்றன.

அப்படி ரெலோ வற்புறுத்தலில் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டதைக் கூட்டியதும், அப்போதைய பிரச்சினையோடு மற்றொரு பிரச்சினையையும் அது தூக்கிப் பிடிக்கும். நேற்று முன்தினம் கூட்டத்திலும் கூட அதுவே நடந்தது.

அதுதான் – தமிழ்க் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கான கோரிக்கை. முதல் இரண்டரை வருடங்கள் முடிந்ததும் அடுத்த இரண்டரை வருடங்களுக்கு இரண்டு தேசிய பட்டியல் எம்.பி. பதவிகளில் ஒன்றை ரெலோவுக்குத் தருவதற்குக் கூட்டமைப்புத்தலைமை இணக்கம் கண்டிருந்ததாம். இப்போது சுமார் மூன்று வருடங்கள் கழிந்த நிலையில் அது இன்னும் தங்களுக்குத் தரப்படவில்லை என்பது ரெலோவின் ஆதங்கம்.

ஒவ்வொரு தடவையும் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தைக்கூட்டப்பண்ணுவதும், அதில் இந்தத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியைக் கோரி வற்புறுத்துவதும் ரெலோவின் வாடிக்கையாகிவிட்டது.

முன்னர் ஒவ்வொரு தடவையும் செய்தமை போல நேற்றும் இந்தக் கோரிக்கைக்கு Snub பண்ணி பதிலளித்து விடயத்தைக் கிடாசி விட்டார் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன்.

பாவம் ரெலோ... ஐந்து உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் கூட்டத்துக்கு உஷாரகப் போன ரெலோ, தேசியப் பட்டில் எம்.பி. விடயத்தில் வழமைபோல வெறுங்கையோடு திரும்பியது.

ஐக்கிய தேசிய முன்னணித் தரப்பிடம் எழுத்து மூலம் உறுதிமொழி வேண்டிக் கொண்டுதான் அதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற ரெலோவின் கோரிக்கையையும் நடைமுறைச் சாத்திய மற்றது. வீண் அரசியல் குழப்பங்களைக் கொண்டு வரும் – என்றெல்லாம் காரணம் காட்டி நிராகரித்தார் சம்பந்தன் என்றும் அறிய வந்தது.

இன்னொரு முக்கிய சம்பவமும் இக்கூட்டத்தில் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் நடந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பங்குபற்றிய கட்சி ஒன்றின் பிரதிநிதி ஒருவர் கூட்டம் நடைபெற்ற சமயத்தில் கூட்டத்தில் பலரும் பேசிய விடயங்களை எல்லாம் தமது தொலைபேசியில் சத்தம் சந்தடியின்றி – நாசூக்காக – ஒலிப்பதிவு செய்து கொண்டாராம். மற்றக்கட்சியின் பிரதிநிதிகள் இதனை அவதானித்தனர் என்றாலும் நேரடியாகக் கேட்க இயலாமல் அடக்கிக் கொண்டனராம்.

கூட்டம் முடிவுற்ற பின்னர் தான் தமது கட்சியின் சக உறுப்பினர்களுக்கு இந்த விடயத்தை அவிழ்த்து விட்டிருக்கின்றனர். இதனால் மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் சீற்றத்தில் இருக்கின்றனர்.

*"இப்படிப் பதிவு செய்துவிட்டு, அவற்றை அநாமேதய இணையத் தளங்களுக்கு வழங்கி, கேட்டுக் கேள்வியில்லாமல் – பதிலளிக்கும் பொறுப்பு இல்லாமல் – அந்த விடயங்களை வெளியிட வைப்பார்கள். அதில் அரசியல் குளிர் காய்வார்கள். அண்மையில் சில இணையங்களில் வெளிவரும் தகவல்களின் சூத்திரம் இதுதான்!"* – என்று கொதித்தார் 'பயர் பிராண்ட்' தமிழ் அரசியல்வாதி ஒருவர்.

இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்டவரின் கட்சித் தலைவருக்கு மேம்போக்காக முன்னெச்சரிக்கை கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

*"தயவு செய்து இந்தக் கூட்டத்தில் நடைபெற்றவற்றைப் பகிரங்கப்படுத்தும் வேலையைப் பாக்க வேண்டாம் என்று உங்கள் ஆள் களுக்குச் சொல்லிவையுங்கள்!"* – என்று அந்தக் கட்சித் தலைவருக்கு சாடைமாடையாகக் கூறப் பட்டதாகத் தெரிகின்றது.

இனி இத்தகைய கூட்டங்களுக்கு கைத்தொலைபேசியை எடுத்துச் செல்வதற்குத் தடை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

- மின்னல்-

## தமிழரசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன நேற்று இருபத்தியைந்து சிரேஷ்ட சட்டத்தரணிகளை ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமித்தார். அதில் இருவர் தமிழர்கள். ஒருவர் கே.வி.தவராஜா. மற்றவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூத்த சட்டத்தரணியான அருணாசலம் முத்துக்கிருஷ்ணன்.

1981 இல் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட கே.வி.தவராஜா சுமார் 38 வருடங்கள் மனித உரிமைகளுக்காகத் தொடர்ந்து வாதாடி வருபவர்.

தமிழ்ப் போராளிகளான குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்றோருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்ட கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.சிவசிதம்பரத்தின் கீழ் கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் கனிஷ்ட சட்டத்தரணியாக முன்னிலையானவர் தவராஜா. அன்றுமுதல் அண்மையில் கதிர்காமர் படுகொலை வழக்கில் விடுவிக்கப்பட்ட எதிரி வரை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட பல நூறு வழக்குகளில் முன் னிலையாகி வாதாடியவர் அவர்.

மனித உரிமைகளுக்காகக் கொழும்பில் துணிச்சலுடன்குரல் எழுப்பிய சட்டத்தரணி தம்பதிகள் எனகே.வி.தவராஜாவும், கௌரிசங்கரி தவராஜாவும் அதற்காகத் தமிழ் ஆர்வலர்களால் பெரிதும் மதிக்கப்படுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிரசுக் கட்சியைச் சேர்ந்த எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. கடந்த ஆண்டு ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் கே.வி.தவராஜா இவ்வருடம் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார். (உ)

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டமைக்கான காரணமாகும். அந்தச்சதி முயற்சியின் பின்னால் இருப்பது யாரென இந்நேரம் கண்டுபிடித்திருப்பார்கள்.

– இவ்வாறு நேற்றுச் சபையில் காட்டமாகக் கருத்து வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்த தினத்தன்றே வவுணதீவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. எனவே நாட்டில் சில அசம்பாவிதங்களை ஏற்படுத்தவே இவ்வாறான செயல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்துடன் உண்மையான குற்றவாளிகள் யாரென்பது மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். சதிகாரர்கள் யாரென்று வெளிப்படுத்த வேண்டும். இப்போது அரசும் இல்லை.

விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களை பயமுறுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான நிலையை ஏற்படுத்தாமல் உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் –என்றார். (ஐ)

## எழுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம் இல்லையேல் ரெலோ சார்பில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் எம்.பிக்கள் இருவரும் ஐ.தே.மு. ஆட்சியமைக்க ஆதரவு வழங்க மாட்டார்கள் என, வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொழும்பில் நேற்று மாலை (நேற்று முன்தினம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிபந்தனைகள் இன்றி ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்கக் கூடாது எனக் கோரினோம். பேரினவாதக் கட்சிகள் தங்களின் தேவை முடிந்ததும் ஏமாற்றி விடுவார்கள் எனச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

நல்லாட்சி அரசால் அரசியல் கைதிகள் விடுதலை சாத்தியமாகவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. இந்நிலையே தொடர்ந்து காணப்படுகின்றது.

யார் ஆட்சிக்கு வந்தாலும் யுத்தக் குற்றம் தொடர்பிலான விசாரணை வேண்டும் என்பதில் எந்தச் சமரசத்துக்கும் நாம் போக மாட்டோம். எனவே ஒரு எழுத்து மூல ஒப்பந்தம் செய்தே ஆதரவு வழங்க வேண்டும்.

எழுத்து மூலம் ஒப்பந்தம் ஏற்படுத்தப்படாத பட்சத்தில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக்கப்பட்டு ஒருவேளை நம்பிக்கைப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் அதற்கு ரெலோ ஆதரித்து வாக்களிக்காது. அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறியதாக அர்த்தம் இல்லை – என்றார். (ஐ-07)

# குடாநாட்டின் பல இடங்களிலும் அரசுக்கு எதிராக சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 06


'வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் டொலர்களுக்காகச் சமாதானத்தை அழிக்க அனுமதிக்கப் போகிறோமா?' எனத் தெரிவித்து யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.


எனினும் இந்தச் சுவரொட்டிகள் யாரால் வெளியிடப்பட்டன என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை, 'பாடசாலை மாணவர்களின் சீருடையை இல்லாமல் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் அதிகார சூதாட்டத்துக்கு எதிராக அணி திரள்வோம்' எனக் குறிப்பிடப்பட்டு இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தினாலும் யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ். நகர் உட்பட யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் இந்த இரண்டு சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன. (ஐ-07)



# முல்லைத்தீவில் சுவரொட்டிகள்

முல்லைத்தீவு, டிசெ. 06

'மீண்டும் யுத்தமோ தீவிரவாதமோ நாட்டுக்குள் உருவாக இடமளிக்கப்படாது' எனக் குறிப்பிட்டு, முல்லைத்தீவின் பல பகுதிகளிலும் நேற்று அதிகாலை சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நகரின் பல இடங்களிலும் முள்ளியவளைப் பிரதேசத்திலும் பொது இடங்களில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

நாட்டில் மீண்டும் யுத்தம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிக்கும் நபர்களுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்று திரள வேண்டும். 30 வருட யுத்தத்தின் வலியை நன்கு அறிந்தவர்கள் நாம் என அந்தச் சுவரொட்டிகளில் குறிப்பிட்டு, யுத்தத்துக்கு எதிரான முல்லைத்தீவு மாவட்ட இளையோர் அமைப்பு என்ற பெயரில் அந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ஐ)

# 'இராணுவம் மீண்டும் வீதிக்கு வரவேண்டும்'

## மஹிந்த தரப்பினரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்






யாழ்ப்பாணம், டிசெ. 06

நாட்டில் மீண்டுமொரு யுத்தம் வேண்டாம் என வலியுறுத்தியும், வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இராணுவம் வீதிக்கு இறக்கப்படவேண்டும் என்று கோரியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்றுப் புதன்கிழமை காலை 9.30 மணியளவில் பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் மற்றும் சில பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளினாலேயே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின்போது வவுணதீவில் இரு பொலிஸார் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்குக் கண்டனம் வெளியிடப்பட்டதுடன், மக்களின் பாதுகாப்புக்காக இராணுவம் வீதிக்கு இறக்கப்பட வேண்டும் என்ற பிரதான கோசமும் முன்வைக்கப்பட்டது.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தின்போது சிவில் உடை தரித்த இராணுவம் பொலிஸார் இணைந்திருந்தனர் எனக் கூறப்பட்டது. (ஐ-07)

# சட்டவிரோத பிரதமர் பதவியை ஏற்று முட்டாள்தனம் செய்துள்ளார் மஹிந்த!

## சாடுகின்றார் அவரின் விசுவாசி கோமின் தயாசிறி



கொழும்பு, டிசெ. 06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி வழங்கிய சட்டவிரோத பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டதன் மூலம், மஹிந்த ராஜபக்ஷ பாரிய முட்டாள்தனமான காரியத்தைச் செய்துவிட்டார் என்று மஹிந்தவின் விசுவாசியான சட்ட நிபுணர் கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்–

பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு, மஹிந்தவுக்கு யார் ஆலோசனை கூறினார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

மஹிந்தவின் சட்டவாளராக இருந்த போது, எனது ஆலோசனைகளை, அவர் சரியாக நடைமுறைப்படுத்தி வந்தார்.

இப்போது நடக்கும் அரசியல் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை அடுத்து, இப்போது நாட்டில், பிரதமரும், அமைச்சரவையும் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நாடு இப்போது மிகவும், மோசமான உறுதியற்ற நிலையில் இருக்கின்றது. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியே இப்போது, மிகவும், சரியான முடிவை எடுக்க வேண்டும்.

இப்போது நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வதற்கு அரசமைப்பில் வழியில்லை. ஆனால், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு சட்ட வழிமுறை உள்ளது– என்றார். (ஐ)

# பாடசாலை உபகரணங்கள் தருவதாகக் கூறி போராட்டத்துக்கு அழைக்கப்பட்ட சிறார்கள்





யாழ்ப்பாணம், டிசெ. 06

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியால் நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்காகச் சிறுவர்களும் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

பாடசாலை உபகரணங்கள் தருவதாகக் கூறியே இந்தச் சிறுவர்கள் பொதுஜன பெரமுன கட்சியால் ஆர்ப்பாட்டத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர் எனக் கூறப்பட்டது.

யாழ். மத்திய பஸ் நிலைத்துக்கு முன்பாக நேற்றுக் காலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சிறுவர்களும் அதிகளவில் பங்கு கொண்டிருந்தனர்.

இது தொடர்பில் அந்தச் சிறுவர்களிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போது, எதற்காகபஸ்நிலையம்வந்தோம் என்று எமக்குத் தெரியாது. கொப்பி, புத்தகங்கள் தருவதாக கூறியே எங்களை அழைத்து வந்தார்கள் என்று அவர்கள் கூறினார்கள். (ஐ-07)

# பேராதனையில் பகிடிவதை; மாணவி ஒருவர் கைதானார்

பேராதனை பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பகடிவதை தொடர்பில் இரு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மாணவி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகம் ஊடாகவும் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற முறைபாட்டுக்கு அமையப் பேராதனைப் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவியொருவரால் தாக்குதலுக்கு இலக்கான மாணவிகள் மூவர் பேராதனை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவி நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் கூறப்பட்டது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு ஒரு வார காலத்தில் சாத்தியமா?

தென்னிலங்கை அரசியல் நெருக்கடியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன – மஹிந்த ராஜபக்ஷ கூட்டு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு சட்டத்துறையும், நீதிமன்றமும் தொடர்ந்து ஆப்பு வைத்து வருகின்றமை அவதானிக்கத்தக்கது.

நிறைவேற்று அதிகாரத்தின் அத்துமீறிய – அடாவடித்தனமான – அரசியல் நடவடிக்கைகளுக்கு உயர்நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றமும் முட்டுக்கட்டை போடுகின்றமை தெரிந்ததே.

இந்த வகையில் இப்போது, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது அவருக்கு ஆலோசகராகவிருந்த சட்ட நிபுணர் கோமின் தயாசிறி கூறியிருக்கின்ற கருத்துகள் அவதானிக்கத்தக்கவை.

விடுதலைப் புலிகளுக்கும் மஹிந்த அரசுக்கும் இடையிலான ஜெனீவாப் பேச்சுகள் வரை மஹிந்த தரப்புக்கு சட்ட ஆலோசகராகச் செயற்பட்டவர் இவர்.

*"ஒக்டோபர் 26 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டதன் மூலம் மஹிந்த ராஜபக்ஷ பெரும் முட்டாள்தனத்தைச் செய்துவிட்டார். பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி மஹிந்தவுக்கு யார் ஆலோசனை கூறினார்கள் என்பது தெரியவில்லை."* – என விசனித்திருக்கின்றார் அவர்.

*"மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை அடுத்து, இப்போது நாட்டில் பிரதமரும் அமைச்சரவையும் இல்லாத நிலைமை இருக்கின்றது. நிறைவேற்று அதிகாரமுள்ள அதிபரே இப்போது மிகவும் சரியான முடிவை எடுக்க வேண்டும்."* – என்று அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

ஆனால், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் செயற்பாடுகளோ நாட்டை அரசியல் நெருக்கடியில் இருந்து மீட்கும் போக்கில் இருப்பனவாகத் தெரியவில்லை.

*"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாநாட்டில் மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரை அவர் ஆட்சி நடத்தத் தகுதியற்றவர் என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கின்றது. பொய்கள், அதற்கு மேல் பொய்கள், உணர்ச்சிவாதம், தவறான முடிவு, வீண் பிடிவாதம், வீம்புத்தனம் என்றே அவரது மனநிலை உள்ளது."* – எனச் சீறுகின்றார் மங்கள சமவீர எம்.பி.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பீல்ட் மார்ஷல் பதவி நிலை வழங்கி கௌரவிக்கப்பட்ட சரத் பொன்சேகாவோ இவை எல்லாவற்றையும் தாண்டி, நேற்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியை மிகமிக மோசமாக விமர்சித்திருக்கின்றார்.

*"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரவில் ஒன்றையும் பொழுது விடிந்ததும் வேறொன்றையும் கூறும் கொள்கையற்ற அரசியலை முன்னெடுத்து வருகின்றார்."* என்று விமர்சித்த சரத் பொன்சேகா, பைத்தியக்காரரான ஜனாதிபதியை இரண்டு வாரங்கள் அங்கொடையில் சிகிச்சைக்கு அனுப்பினாலும் பரவாயில்லை என்றும், அதற்கு ஏற்ற வகையில் சட்டத் திருத்தம் கூடச் செய்யலாம் என்றும் கூறியிருக்கின்றார்.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிரான தரப்பினர் – சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போன்றவற்றைச் சேர்ந்தோர் – நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகியிருக்காத காரணத்தினால் எதிர்ப்பின்றி சரத் பொன்சேகா இப்படிப் பேசியிருக்கிறார் என்று கருதலாம்.

நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை நாடாளுமன்றத்தில் இப்படித் தரக் குறைவாகப் பேசுகின்றமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றாலும், அண்மைக் காலமாகத் தமது ஏறுமாறான அரசியல் நடவடிக்கைகள் மூலம் அத்தகைய தரத்திலான மனநிலைப் பாங்கையே நாட்டு மக்கள் மத்தியில் ஜனாதிபதி ஏற்படுத்தி வருகின்றார் என்பதும் மறுக்கக்கூடியதல்ல.

நாடாளுமன்றத்தில் ஒட்டுமொத்தமாகப் பெரும்பான்மைப் பலத்தைத் தம் கையில் கட்டி வைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்கவிடம் பிரதமர் பதவியை வழங்குவதுதான் ஜனநாயக முறைமை. அதைச் செய்ய மறுத்து வீம்புத்தனமாகப் பிடிவாதம் பிடிக்கும் ஜனாதிபதி, மாற்று ஒருவரைப் பிரதமராக்கத் தேடுகின்றார்.

அவரது கோரிக்கையை ஏற்று ஒக்டோபர் 26 ஆம் திகதி பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷவே இன்று அரசியலில் முகம் குப்புற அடிபட்டுக் கிடக்கும் நிலைமை. இந்தச் சூழலில் இன்னொரு 'கோம்பர்' இப்படி பெரும்பான்மை ஆதரவு இல்லாமல் பிரதமர் பதவியை ஏற்று, தமது அரசியல் எதிர்காலத்தைத் தொலைக்க முன்வரமாட்டார் என்பது நிச்சயம். ஆகவே ரணில் அல்லாத மாற்றுப் பிரதமர் ஒருவரைத் தேடும் மைத்திரியின் முயற்சி அவர் தமக்குத் தாமே விதித்துள்ள ஒரு வார காலக்கெடுக்குள் வெற்றியளிக்கப் போவதில்லை என்பது தெரிந்ததுதான்.

அப்படியானால், இப்போதைய அரசியல் நெருக்கடியிலிருந்து எப்படி நாட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீட்கப் போகின்றார்?

குறளுபடியான அரசியல் முடிவுகளை எடுக்கும் அவர்தான் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும்.

# நல்லிணக்கத்தைச் சிதைக்கிறார் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி

### அனந்தி சசிதரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 06

வீதியில் சோதனைச் சாவடிகளை அமைத்து மக்களை சோதனையிடுவோம் என்ற யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதியின் கருத்து மக்களுக்கு மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது இன முரண்பாட்டையும் நல்லிணக்கத்தையும் சிதைக்கும் செயற்பாடு என ஈழத்தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

யாழ். நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியின் கருத்து முன்னாள் போராளிகளை அச்சமூட்டுவது மட்டுமன்றி வடக்கில் உள்ள மக்களும் அச்சத்துடன் வாழும் ஒரு நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.



போராளிகள் யுத்த அழிவில் இருந்து மீண்டெழுந்து, புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னர் தமது குடும்பத்துடன் இணைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் மனதில் மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் படைத் தளபதியின் கருத்து அமைந்துள்ளது.

படைத்தளபதி இவ்வாறு அச்சமூட்டும் கருத்தைத் தவிர்த்திருக்க வேண்டும். தமது இராணுவத்தின் நிலை மற்றும் இராணுவத்தின் கடமைகளை ஆற்றட்டும். ஆனால், சமூக மயப்படுத்தப்பட்டிருந்த போராளிகளை அச்சமூட்டும் வகையில் கருத்துக்கள் தெரிவிப்பதென்பது, மிகவும் வருத்தத்திற்குரியது.

தெற்கில் தோன்றியிருக்கும் பதவிக் குழப்பம் வடக்கில் மக்களை எந்தளவு பாதிப்புக்கு உள்ளாக்கியிருக்கின்றது என்பதற்கு அப்பால், இந்தக் கொலைச் சம்பவமும் கூட ஏதாவது ஒரு பின்னணியில் நடந்திருக்கலாம் என மக்கள் கருதுகிறார்கள்.

கொலை செய்தவர்கள் யார் எனக் கண்டு பிடிப்பதற்கு முன்னரே, போராளிகள் மீது அந்தப் பழியைத் தூக்கிப் போடும் செயற்பாடு மக்களைத் தொடர்ந்தும் அச்சத்தில் வைத்திருக்கும் முயற்சி. இவ்வாறு இனங்களுக்கு இடையில் முரண்பாட்டையும், நல்லிணக்கத்தையும் சிதைக்கும் கருத்துக்களை அதிகாரத் தொனியில் தெரிவிப்பது கண்டனத்திற்குரிய விடயம்– என்றார். (ஐ)

# இரணைமடுக்குள நீர் 35 அடியை எட்டியது!

### சி.வீ.கே.சிவஞானம் பார்வையிட்டார்



வடக்கின் பெரும் குளமான இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 35 அடியை எட்டியுள்ளது.

வடக்கு மாகாணத்தின் விவசாயத்திற்குப் பெரும் பங்காற்றும் முக்கிய குளமான இரணைமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் 2300 மில்லியன் ரூபா செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்பின் மூலம் வடக்கு மாகாண சபையால் முன்னெடுக்கப்பட்டன.

புனரமைப்புப் பணிகள் முடிவடைந்ததை அடுத்து குளத்தில் தற்போது 36 அடி வரையிலான நீர் சேமிக்கக் கூடிய ஏது நிலைகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் தற்போது பெய்து வரும் மழையினால் இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 35 அடிவரை உயர்வடைந்துள்ளது. நேற்றுமுன்தினம் மாலை 5.00 மணியளவில் இரணைமடுக் குளத்தை வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே சிவஞானம் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

தற்போது 35 அடி நீர் இரணைமடுக் குளத்தில் காணப்படுகின்றது. 36 அடியை எட்டிய பின்னரே இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்படும் என இரணைமடு கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்திடம் தெரியப்படுத்தினர். (ஐ)

# நீதிமன்ற உத்தரவால் புதிய அரசு முடக்கம்

### கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவினால், புதிய அரசு முன்னெடுத்த அனைத்து நடவடிக்கைகளும் முடங்கிவிட்டன என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் தளத்திலேயே நாமல் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.



"ஐக்கிய தேசியக் கட்சியால் பொருளாதாரத்துக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத்தைச் சரியாக்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்களுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பால் தடையேற்பட்டுள்ளது. ஒக்ரோபர் மாதம் புதிய அரசு உருவாக்கப்பட்ட பின்னர் மக்களின் அடிப்படை விடயங்களுக்காக வரி நிவாரணத்தைப் பெற்றுக்கொடுத்தல், எரிபொருள் விலையைக் குறைத்தல் உள்ளிட்ட சகல வாழ்வாதாரச் செலவீனங்களையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது" – என அவர் பதிவிட்டுள்ளார். (ஐ)

# ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு பொலிஸ் தலைமைப் பகுதிக்குட்பட்ட கூழாவடிப் பகுதியில் ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை அதிகாலை கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு வந்த ரயிலில் மோதுண்டே இவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் சுமார் 50 வயது மதிக்கத்தக்கவர் என்றும் தலை, கால் துண்டிக்கப்பட்ட நிலையில் தலைப் பகுதி முற்றாகச் சிதைவடைந்துள்ளமையால் சடலம் அடையாளம் காணமுடியாத நிலையில் உள்ளதாகவும் மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தின் அருகே ரோர்ச் லைற் ஒன்றும் காணப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

**பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு செயற்பாடு**

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

16 2018

ஆற்றல் கொண்ட பெண்களே நல்லதோர் சமூகத்தின் ஆரோக்கியமாதலால், பெண்களின் ஆற்றல் வளர்த்து ஆச்சரியக் குறிகளாய் இவ் உலகம் ஆளச் செய்திடுவோம்.

யாழ் சமூக செயற்பாட்டு மையம்

JSAC

**நாளை**

07.12.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: கேட்டை முழுவதும்
திதி: அமாவாசை பி.ப 1.28 வரை
சுபநேரம்: 6.17 – 7.47 வரை
இராகுகாலம்: 10.47 – 12.17 வரை

# தமிழர் மனங்களில் மைத்திரி மறக்கமுடியாத பருதுரோகி!



## சஜித் பிரேமதாஸ காட்டம்

கொழும்பு, டிசெ. 06

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வதந்திக் கருத்துக்களால் தமிழ் மக்களுக்கு எதிரியாக இருக்கலாம். ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்கள் மனங்களில் மறக்க முடியாத பச்சைத் துரோகி ஆவார்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அலரிமாளிகையில் வைத்து வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றின் இலங்கைச் செய்தியாளர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2004ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கும் அதன் பிரதித் தலைவராக இருந்த கருணா அம்மானுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் – பிளவுகளுடன் அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவைத் தொடர்படுத்தி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளிவந்த கதை வெறும் வதந்தியாகும். கருணா அம்மானை ஐ.தே.க. காப்பாற்றி வைத்திருக்கவில்லை. அவருக்குப் பாதுகாப்பு, பிரதி அமைச்சுப் பதவி, சுகபோக வாழ்க்கை ஆகியவற்றை மஹிந்த ராஜபக்ஷ அரசே வழங்கியிருந்தது. இது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

மஹிந்தவின் கொடுங்கோல் ஆட்சியில் கருணா அம்மானின் அட்டூழியம் கிழக்கில் தலைவிரித்தாடியது. இதற்கு மஹிந்த அரசு முழு ஆதரவையும் வழங்கியிருந்தது.

இப்படிப்பட்ட மஹிந்த தரப்புடன்தான் தமிழ் மக்களின் பெரும்பாலான வாக்குகளினால் ஜனாதிபதியாகத் தெரிவான மைத்திரிபால சிறிசேன இணைந்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களின் அமோக வாக்குகள் மைத்திரிபாலவுக்குக் கிடைத்தன. அதை அவர் உணர்ந்தும் உணராமல் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றார்.

2004ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் விடுதலைப் புலிகளின் அமைப்பிலிருந்து கருணா அம்மான் விலகினார். இந்த விவகாரத்தையடுத்து வெளிவந்த கட்டுக்கதையால் ரணில் விக்கிரமசிங்க மீது தமிழ் மக்கள் சிலர் அதிருப்தியில் இருக்கலாம். ஏன் ரணிலை எதிரியாகக்கூட அவர்கள் பார்க்கலாம். ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்கள் மனங்களில் மறக்க முடியாத பச்சைத் துரோகி ஆவார்.

1993ஆம் ஆண்டு மே தினத்தன்று கொழும்பு நகரில் விடுதலைப்புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த எனது தந்தை ரணசிங்க பிரேமதாஸ உயிரிழந்தார். அதற்காக விடுதலைப்புலிகள் அமைப்பை ஆதரித்த வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களை நான் வெறுக்கவில்லை. போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட அவர்களை எனது சகோதரர்களாகவே நான் பார்க்கின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறியதும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கியே தீரும். அந்தத் தீர்வு இலங்கையிலுள்ள சகல இனத்தவர்களும் ஏற்கும் தீர்வாக இருக்கும் – என்றார்.(ஐ)

# கடற்பரப்புகளில் பலத்த மழை

கொழும்பு, டிசெ. 06

இலங்கைக்குத் தென்கிழக்காக வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட கீழ் வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக அம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் ஊடாகத் திருகோணமலை வரையான ஆழம் கூடிய கடற்பரப்புக்களில் பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25 – 35 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

கொழும்பிலிருந்து புத்தளம் ஊடாக மன்னார் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 – 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும். அவ்வேளைகளில் அந்தக் கடற்பிரதேசங்கள் ஓரளவு கொந்தளிப்பாகவும் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது. (ஐ)

# கனேடியத் தூதுவர் முல்லைத்தீவில்



முல்லைத்தீவு, டிசெ. 06

கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினனுக்கும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் ரவிகரனோடு கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரனும் கலந்திருந்தார்.

இந்தச் சந்திப்பில், சமகால அரசியல் நிலவரம், முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் நில அபகரிப்பு மற்றும் பௌத்த மயமாக்கல், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், முன்னாள் போராளிகள் எதிர்கொள்ளும் சவால்கள், வன ஜீவராசிகள் திணைக்களத்தின் நந்திக்கடல் ஆக்கிரமிப்பு, மாவட்டத்திலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள், மகாவலி (எல்) வலயம் தொடர்பான பிரச்சினைகள், விவசாயக் காணிகள் அபகரிப்பு செய்யப்படுவது உட்படப் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மஹிந்தவின் பாதுகாப்பை உடனடியாகவே நீக்குங்கள்

## கோருகிறார் நளின் பண்டார

கொழும்பு, டிசெ. 06

அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ளதாக அறிவித்து மேன்முறையீட்டு நீமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையுத்தரவின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த முன்னாள் ஜனாதிபதி என்பதால் அவருடைய பாதுகாப்பை முற்றாக நீக்குமாறு கோரவில்லை என்றபோதிலும் அவர் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் வழங்கப்பட்டுள்ள மேலதிக பாதுகாப்பை நீக்குமாறே கோரிக்கை விடுக்கிறேன்.

அத்துடன் கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி புதிய பிரதமர் நியமிக்கப்பட்டதன் பின்னர் பொலிஸ்மா அதிபரால் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் பாதுகாப்பு நீக்கப்பட்டதைப் போன்று உடன் அமுலுக்கு வரும் வகையில் புதிய அமைச்சர்களாக நியமிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பும் நீக்கப்பட வேண்டும் – என்றார். (ஐ)

# தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம் தொடர்கிறது




தோட்ட தொழிலாளர்களால் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றுப் புதன்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின்போது 1000 ரூபா சம்பள உயர்வுக்கு இணக்கம் எட்டப் படாத நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மலையகத்தின் பல பகுதிகளில் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

1000 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கப்படும் வரை இந்தப் போராட்டம் தொடரும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் பல பகுதிகளில் தோட்டத் தொழிற்சாலைக்கு முன்னால் கூடிய தொழிலாளர்கள் தங்களுக்கு 1000 ரூபா சம்பளம் வழங்கும் வரை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகக் கூறியுள்ளனர். (ஐ)

# பொலிஸ்மா அதிபர் பக்கச்சார்பாக செயற்படுகிறாரா?

கொழும்பு, டிசெ. 06

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பக்கச்சார்பாகச் செயற்படுகின்றாரா என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனோமா கமகே கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எமது அரசைக் கலைத்தபோது எமது பாதுகாப்பு உடனடியாக நீக்கப்பட்டது. எனினும், மஹிந்த தரப்பு சட்ட ரீதியாகச் செயற்படவில்லை என நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில் பொலிஸ் மா அதிபர், ஏன் மஹிந்த தரப்பின் பாதுகாப்பைக் குறைக்கவில்லை. எமக்கு ஓர் நியாயமும், மஹிந்த தரப்புக்கு ஓர் நியாயமும் இருக்க முடியாது – என்றார். (ஐ)

# மகளிர் விடுதியில் இரகசிய கமரா பொருத்தி ஆபாசம் ரசித்த வீட்டு உரிமையாளர் கைது

## சென்னையில் பலே ஆசாமியின் கைவரிசை!



நவீன தொழில் நுட்பத்துடன் வைபை மூலம் ஆபாச படம் பார்க்க பல்புகளிலும் நவீன கேமரா பொருத்தி வைத்த பெண்கள் விடுதி உரிமையாளர் பொலிஸாரிடம் சிக்கியிருக்கின்றார்.

சென்னை ஆதம்பாக்கம் தில்லை கங்காநகர்முதலாவது தெருவில் பெண்கள் தங்கும் விடுதி இயங்கி வருகிறது. இந்த தங்கும்விடுதியைகுரோம்பேட்டை அஸ்தினாபுரத்தை சேர்ந்த தொழில் அதிபர் சம்பத் ராஜ் என்கிற சஞ்சீவி (வயது 48) என்பவர் நடத்தி வந்தார். பி.இ. பட்டதாரியான அவர் கட்டுமான நிறுவனமும் நடத்தி வந்தார்.

இந்த தங்கும் விடுதியில் நுங்கம்பாக்கத்தில் உள்ள ஒரு கல்லூரியில் வேலை பார்க்கும் பேராசிரியை உள்பட 7 பேர் தங்கி இருந்தனர். அவர்கள் தலா ரூ.7 ஆயிரம் வாடகை கொடுத்தனர். பேராசிரியை புதுச்சேரியை சேர்ந்தவர் ஆவார். மற்றவர்கள் மதுரை, புதுக்கோட்டை, கர்நாடகா, கொல்கத்தா ஆகிய இடங்களை சேர்ந்தவர்கள.

திங்களன்று பேராசிரியை குளித்து விட்டு தலைமுடியைக் காய வைப்பதற்காக ஹேர்டிரையரை பயன்படுத்த அங்குள்ள மின்சார பிளக்கில் சொருகினார். ஆனால் பிளக்கில் அது நுழையவில்லை. எனவே அவர் பிளக்கை கழற்றிப் பார்த்தார். அப்போது அதனுள் சிறிய கேமரா இருந்தது. கேமராவே பிளக்காக வடிவமைக்கப்பட்டிருந்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் புதுச்சேரியில் உள்ள தனது உறவினரான பொலிஸ் அதிகாரிக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்துத் தகவல் தெரிவித்தார். அவர் இதுபற்றி பரங்கிமலை துணை கமினர் முத்துசாமியிடம் கூறினார்.

இதையடுத்து இவ்விடயத்தை விசாரிக்கத் தனிப. பொலிஸ் படை அமைக்கப்பட்டது.

அவர்கள் சம்பந்தப்பட்ட விடுதிக்கு சென்று சோதனை நடத்தினார்கள். அப்போது அந்த விடுதியில்ரகசியகேமராக்கள்பொருத்தப்பட்டு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

மொத்தம்9ரகசியவயர்லெஸ் கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. 3 குளியல் அறை, படுக்கை அறை விளக்கு, ஹோலில் உள்ள கடிகாரங்கள், ஹேங்கர், பூஜாடி, கண்ணாடி ஆகிய இடங்களிலும் கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. இந்த கேமராக்கள் மூலம் சம்பத் ராஜ் பெண்களை ரகசியமாக படம் பிடித்தது தெரிய வந்தது.

இதையடுத்து சம்பத் ராஜ் தேடி மடக்கப்பட்டார். அவர் பொலிஸுக்கு அளித்த வாக்குமூலம் வருமாறு:-

முன்பணமாக ரூ.50 ஆயிரமும், வாடகையாக மாதம் ரூ.24 ஆயிரமும் கொடுத்து இதே வீட்டை எடுத்தேன். இது 2100 சதுரஅடியில் 3 படுக்கை அறை கொண்ட வீடு. இங்கு 7 பேர் தங்கி இருந்தனர்.

எனது மனைவி சித்தா மருத்துவர். அவர் சித்தா மருத்துவம் பார்ப்பதற்காக படுக்கை உள்ளிட்ட பொருள்களை வாங்கி அந்த வீட்டில் போட்டிருந்தேன். ஹோலில் உள்ள ஒரு பகுதியை சித்தா மருத்துவத்துக்கான அலுவலகமாக பயன்படுத்த முடிவு செய்திருந்தேன். அங்கு தங்கியிருந்த 7 பெண்களும் பகலில் வேலைக்கு சென்று விடுவார்கள் என்பதால் பகலில் ஹோலை சித்தா மருத்துவத்துக்கு பயன்படுத்த அனுமதித்தனர்.

எனவே பெண்கள் அனைவரும் வேலைக்கு சென்றபிறகு அங்குவந்துவிடுவேன். இதனால் கமரா பொருத்துவது எனக்கு வசதியாக போய்விட்டது.

வீட்டை வாடகைக்கு எடுத்த போதே என்ஜினீயர் வேலை முடிந்ததும் கமராக்களை நானே ரகசியமாக பொருத்தினேன். இந்த கேமராக்களை ஆன்லைன் இணையதளத்தில் வாங்கினேன். ஒவ்வொரு கமராவும் ரூ.2,500 ஆகும்.

இவை அனைத்துமே உளவுத் துறையினர் பயன்படுத்தும் ரகசிய கமரா ஆகும். பட்டன் வடிவில், ஹேங்கர் வடிவில் இந்த கமராக்கள் இருந்தன. இந்த கமராக்களில் மெமரி கார்டையும் பொருத்தி இருந்தேன்.

ஆள்கள் நடமாடும் அசைவு இருந்தால் மட்டுமே பதிவு செய்யும் கேமரா இவை. மற்ற நேரங்களில் இயங்காது. இந்தக் கமராக்கள் மூலம் மெமரி கார்டில் பதிவான படங்களைத்தான் பார்க்க முடியும் என்பதால் தற்போது நவீன தொழில் நுட்பத்துடன் வைபை மூலம் இயங்க கூடிய 3 குண்டு பல்புகளுடன் கூடிய கேமராக்களை ஆன்லைன் மூலம் வாங்கினேன். இந்த கேமராக்களை பொருத்தினால் மெமரி கார்டை கழற்ற தேவையில்லை. வைபை மூலமே ஆபாச காட்சிகளை பார்க்கலாம் என்பதால் அதை பொருத்த முடிவு செய்திருந்தேன். ஆனால் அதற்குள் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டேன். - இவ்வாறு அவர் கூறினார்.

## தன் நாக்கால் நெற்றியை தொடும் மனிதர்!



இந்தியாவுக்கு அருகில் நேபாளத்தில் நீண்ட தனது நாக்கினால் தனது நெற்றியைத் தொடும் கோர முக மனிதனின் வீடியோ படம் சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

உலகில் பெரும்பாலான மக்கள் தங்களுடைய நாக்கை வைத்து மூக்கைதான் தொடுவதற்கு முயற்சி செய்வார்கள். அதில் ஒரு சிலர் செய்து காட்டுவர், பலர் அதை செய்ய முடியாமலே விட்டுவிடுவர். இந்நிலையில் இதை எல்லாம் மிஞ்சும் வகையில், நீளமான நாக்கை கொண்டு தன்னுடைய நெற்றியை தொட்டு அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார் ஒருவர்.

நேபாளத்தைச் சேர்ந்தவர் யாகிய பகதூர் கதுவல். 35 வயதான இவர்தான் இந்த ஆச்சரியத்தை செய்துள்ளார். உலகில் முதல் முறையாக ஒருவர் நாக்கை வைத்து நெற்றியை தொடுவது இப்போது தான் எனவும் கூறப்படுகிறது. இது குறித்து அவர் கூறுகையில், நான் முதலில் என்னுடைய உதடுகளால் மூக்கை மூடி, அதன் பின் என்னுடைய நாக்கை வைத்து நெற்றியை தொடுவேன்.

ஒரு வேலை நான் பேய் போல் நடிக்க வேண்டிய வாய்ப்பு வந்தால், நான் மேக் அப் எதுவும் போடத் தேவையில்லை, என்னை பார்த்தாலே மக்கள் பயந்து விடுவார்கள் என்று கூறுகிறார்.

மேலும் இவருக்கு வாயில் ஒரே ஒரு பல் மட்டும் தான் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தயவு செய்து இவர் செய்வதை போன்று யாரும் முயற்சி செய்ய வேண்டாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி இந்த வீடியோவைக் கண்ட பலரும் அவரை பார்த்தாலே பயமாக இருக்கிறது என்று கூறியுள்ளனர்.

## 20 ஆண்டுகளில் 19 ஆயிரம் பெண் சிசுக்களை கருக்கலைப்பு மூலம் கொன்ற மாது கைதானார்

### திருவண்ணாமலைப் பகுதியில் அதிர்ச்சிச் சம்பவம்

தமிழ்நாடு திருவண்ணாமலையை அடுத்த வேங்கிக்கால் பொன்னுசாமி நகரில் சட்ட விரோதமாக சிசுவின் பாலினத்தைக் கண்டறிந்து கருக்கலைப்பு செய்வதாக வந்த புகாரின் பேரில், சென்னை ஊரக மற்றும் மருத்துவ நலப்பணிகள் அலுவலகக் கண் காணிப்பாளர் கமலக்கண்ணன் தலைமையிலான சிறப்புக் குழுவினர் கடந்த முதலாம் திகதி நள்ளிரவு கருக்கலைப்பு மையத்துக்கு ‘சீல்’ வைத்தனர்.

கருக்கலைப்பு செய்து வந்த ஆனந்தி, அதற்கு துணையாக இருந்த அவரது கணவரும், சென்னை முகப்பேரில் உள்ள வீட்டு வசதி வாரியத்தின் உதவிப் பொறியியலாளருமான தமிழ்ச்செல்வன் மற்றும் தரகராக செயல்பட்ட ஓட்டோ ஓட்டுநர் சிவக்குமார் ஆகிய 3 பேர் கைது செய்யப்பட்டனர்.


இந்நிலையில், ஆரணி அடுத்த சேவூர் கிராமத்தில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கும் விழா திங்களன்று மாலை நடைபெற்றது. இதில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேவூர் ராமச்சந்திரன் பங்கேற்றார். அதே விழாவில் கலந்து கொண்டு பேசிய ஆட்சியர் கந்த சாமி, திருவண்ணாமலை மாவட்டத்தில் பெண் சிசுக்கள் கொலை செய்யப்படுவதால் தேசிய அளவில் தலை சாய்ந்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று வேதனையுடன் கூறினார்.

மேலும் அவர் பேசும்போது, மாவட்டத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பு 1,000 ஆண்களுக்கு 920 முதல் 925 பெண்கள் என விகிதாச்சாரம் இருந்தது. அது இப்போது 834 ஆகக் குறைந்து விட்டது. பெண்களுக்கு எதிரான சமுதாயத்தை நோக்கி செல்கிறோம். இதுதொடர்பாகஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார். அவர், படிக்கவே இல்லை. பிளஸ் 2 கூட தேர்ச்சி பெறவில்லை. அரசு பல்வேறு முயற்சி எடுத்து அவரைக் கைது செய்ததுள்ளது. அவரது செல்போனை ஆய்வு செய்தபோது கடந்த ஞாயிற்றுக் கிழமை மட்டும் 25 கருக்கலைப்புக்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்தது. அது அதிர்ச்சியளிக் கிறது.

கடந்த 20 ஆண்டுகளாக 19 ஆயிரம் பெண் சிசுக்களை, அந்த பெண் கொன்றுள்ளார். 19 ஆயிரம் பெண்களைக் கொன்று சமுதாயத் துக்கு மிகப் பெரிய துரோகத்தை செய்துள்ளார். திருவண்ணாமலை மாவட்டத்தில் கருக்கலைப்பு மூலம் பெண்கள் இல்லாத சமுதாயத்தை உருவாக்கியுள்ளனர். அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அமைச்சர் சேவூர் எஸ்.ராமச்சந்திரன் பங்கேற்ற அரசு விழாவில், சட்ட விரோத கருக்கலைப்பு மூலம் பெண் சிசுக்கள் கொலை செய்யப் பட்டு வருகின்றமை குறித்து ஆட்சியர் கந்தசாமி வெளிப்படையாக பேசியிருக்கின்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## இந்தியாவின் மிகப் பாரிய செயற்கைக் கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது!







இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ தயாரித்ததிலேயே மிகுந்த எடையுள்ளதும், அதிநவீனமான முறையில் செய்யப்பட்டதுமான ஜிசாட் - 11 செயற்கைக்கோள் பிரெஞ்சு கயானாவில் இருந்து ஏரியேன் ராக்கெட் மூலம் நேற்று புதன் கிழமை காலை விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்தப் பணி வெற்றிகரமாக அமைந்தததாக இஸ்ரோ தமது இணைய தளத்தில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கொரூ - வில் உள்ள ஏவுதளத்தில் இருந்து ஏரியேன் - 5 VA - 246 ராக்கெட் மூலம் ஏவப்பட்ட இந்த செயற்கைக் கோளின் எடை 5,854 கிலோ. இந்தியாவில் அதிவேக இணைய இணைப்புகளைப் பெற இந்த செயற்கைக்கோள் உதவும்.

இந்தியாவின் பெருநிலப் பகுதியிலும், தீவுகளிலும் இணையத் தொடர்புக்கு உதவும் வகையில் இந்த செயற்கைக் கோளில் மல்டி - ஸ்பாட் பீம் ஆண்டெனா உள்ளது. பிராண்ட்பேண்ட் சேவையில் இன்றியமையாத சேவையை ஆற்றும் என்றும், அடுத்த தலைமுறை செயலிகளை செயல்படுத்துவதற்கான தளத்தை அமைத்துக் கொடுக்கும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

# மஞ்சள் ஜாக்கெட் போராட்டம் தீவிரம்; பிரான்ஸில் விரைவில் அவசர நிலைமை



பாரிஸ்,டிசெ.05

பெற்றோல், டீசல் விலையுயர்வைக் கண்டித்து பிரான்ஸ் நாட்டு மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர். இதனால் பிரான்ஸில் அசாதாரண சூழல் நிலவி வருகிறது.

பிரான்ஸின் பல இடங்களில் நடைபெற்ற இந்த போராட்டத்தால் பிரான்ஸ் முழுவதும் பெரும் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது. சில இடங்களில் வன்முறையும் வெடித்துள்ளது. இதனால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர பிரான்ஸ் அதிபர் மக்ரோன் அவசர நிலையைப் பிரகடனம் செய்யலாமா என யோசித்து வருகிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விலை உயர்வால் அன்றாட செலவுகள் மிகவும் அதிகமாகி உள்ளதால் மக்கள் கடும் கோபம் அடைந்துள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக இளைஞர்கள் சிலர் மஞ்சள் ஜாக்கெட் அணிந்து போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்த மஞ்சள் ஜாக்கெட் பிரான்ஸில் உள்ள வாகன ஓட்டுநர்களின் சீருடையாகும். கார் ஓட்டுநர்கள் ஒருங்கிணைத்த இந்த போராட்டம் ஒரு கட்டத்தில் மக்கள் போராட்டமாக மாறியது. பேஸ்புக் மற்றும் டுவிட்டர் போன்ற சமூக வலைத் தளங்களும் இந்தப் போராட்டத்தில் முக்கியப் பங்காற்றி வருகின்றன.

# ‘ஒபெக்’ அமைப்பில் இருந்து திடீரென கட்டார் விலகல்!

## உலக எரிபொருள் விநியோகம் பாதிக்கும் சூழல்

*பெற்றோலியப் பொருள்கள் உற்பத்தி செய்யும் நாடுகள் கூட்டமைப்பான ‘ஒபெக்’ அமைப்பில் இருந்து விலகப் போவதாக கட்டார் திடீரென அறிவித்துள்ளது. கட்டாரின் இந்த முடிவு உலக அளவில் பெற்றோல், டீசல் விலை நிலைவரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிகிறது. அதுபோலவே அரபு நாடுகளிடையே மீண்டும் மோதல் தொடங்கும் சூழலும் உருவாகியுள்ளது.*



உலகில் எரிபொருள் உற்பத்தி, விநியோகம், விலை நிர்ணயம் போன்றவற்றை கட்டுப்படுத்தி வருவது ’ஒபெக்’ அமைப்பு. ஒவ்வொரு நாட்டினதும் தினசரி உற்பத்தியை அதுவே கண்காணித்து அங்கீகரிக்கின்றது. அந்தக் கட்டுப்பாட்டில் இருந்து வெளியே வந்தால் கட்டார் தன்விருப்பப்படி கட்டுமட்டில்லாமல் எவ்வளவு எரிபொருளையும், எந்த விலைக்கும் தினசரி உலக சந்தைக்கு விநியோகத்துக்கு விடலாம். அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் மசகு எண்ணெய்யின் விநியோக முறைமையும் விலையும்

உலகசந்தையில்தளம்பல்நிலையை அடையும்.

தீவிரவாதிகளுக்கு கட்டார் ஆதரவு அளிப்பதாகக் குற்றம் சாட்டி அந்த நாட்டுடன் சவுதி அரேபியா, பஹ்ரைன், எகிப்து, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 4 நாடுகள் தூதரக உறவைத் துண்டித்தன. இதனால் மிகப்பெரிய பின்னடைவையும், பொருளாதார பாதிப்பையும் கட்டார் சந்தித்தது. அந்த நாட்டுடன் விமான சேவை நிறுத்தப்பட்டது.

தரை வழியாகப் பொருள்களை, அண்டைய தேசங்களான மற்ற அரபு நாடுகள் வழியாகத்தான் கட்டார் தனது நாட்டுக்குக்கொண்டு செல்ல முடியும். ஆனால் அந்தப் பாதையை சவுதி அரேபியா அடைத்ததால் பெரும் இன்னலுக்குள் சிக்கியது கட்டார். இதனால், கட்டார் அத்தியாவசியப் பொருள்களின் கையிருப்பின்றித் தவிக்கும் சூழல் ஏற்பட்டது. அந்நாட்டுப் பொருளாதாரம் முடங்கியது. இதன் பிறகு அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் தலையிட்டு பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு கண்டன. இந்தச் சிக்கலில் இருந்து கட்டார் தற்போதுதான் வெளியே வந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில், எண்ணெய் வள நாடுகளான அரபு நாடுகளை மையமாகக் கொண்டு இயங்கும் பெற்றோலியப் பொருட்கள் உற்பத்தி நாடுகள் கூட்டமைப்பான ‘ஒபெக்கில்’ இருந்து வெளியேறப்போவதாக கட்டார் நேற்றுத் திடீரென அறிவித்துள்ளது.

இதுகுறித்து கட்டார் பெட்ரோலியத் துறை அமைச்சர் சத் அல் – காஃபி தோஹாவில் இன்று செய்தியாளர்களிடம் கூறுகையில்,

‘ஒபெக்’ என அழைக்கப்படும் பெற்றோலியப் பொருள்கள் உற்பத்தி நாடுகளின் கூட்டமைப்பில் இருந்து வெளியேற முடிவு செய்துள்ளோம். ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த முடிவு நடைமுறைக்கு வருகிறது. ‘ஒபெக்’ நாடுகளின் கூட்டம் இப்போது நடைபெறுகிறது. அந்தக் கூட்டத்தில் எங்கள் முடிவை தெரிவித்து விடுவோம்” என்றார்.

கட்டாரின் இந்த முடிவு உலக பெற்றோல், டீசல் விலை நிலைவரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிகிறது. அதுபோலவே அரபு நாடுகளிடையே மீண்டும் மோதல் தொடங்கும் சூழலு உருவாகியுள்ளது.

’ஒபெக்’ கூட்டமைப்பின் கூட்டம் இப்போதுநடைபெறுகிறது. சவுதி அரேபியா கோலோச்சும் இந்த அமைப்பில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் எனத் தெரிகிறது. சவுதி கூட்டமைப்பு நாடுகள் பதிலுக்கு தடை விதித்தால் மசகு எண்ணெய் சந்தையிலும், கட்டாரின் பொருளாதாரத்திலும் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

(உ)

# தலிபான்கள் பேச்சுக்கு வர உதவுங்கள்! இம்ரான் கானிடம் டிரம்ப் கோரிக்கை



தலிபான்கள் சமாதான பேச்சுக்கு வர உதவவேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், “ஆப்கானிஸ்தானில் கடந்த 17 ஆண்டுகளாக தலிபான் பயங்கரவாதிகள் கொடூரத் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் நமது இரு நாடுகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. மேலும் உங்கள்(இம்ரான்கான்) பிராந்தியத்தில் முக்கிய பிரச்சினையாக உள்ள இவ்விவகாரத்திற்கு நீங்கள் முன்னுரிமை அளிக்கவேண்டும். எனவே தலிபான்கள் சமரச பேச்சில் ஈடுபடுவதற்கு நீங்கள் ஆதரவு அளிக்கவேண்டும். சமாதான பேச்சுக்கும் உதவி செய்யவேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது.

அல்கெய்தா தலைவர் பின்லேடனுக்கு அபோதாபாத் நகரில் அடைக்கலம் கொடுத்ததை பாகிஸ்தான், அமெரிக்கா வுக்கு செய்த துரோகம் என்று கடந்த வாரம் டிரம்ப் விமர்சித்து இருந்த நிலையில் இந்த கடிதத்தை எழுதி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக மசகு எண்ணெய் சந்தையில் கட்டாரின் முடிவால் பெரும் தாக்கம்

*பெற்றோலியப் பொருள்கள்உற்பத்தி நாடுகள்கூட்டமைப்பான ‘ஒபெக்’ அமைப்பில் இருந்து விலகப்போவதாக கட்டார் திடீரென அறிவித்துள்ளமை மசகு எண்ணெய் சந்தையில் புதிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.*

இதுகுறித்து கட்டார் பெற்றோலியத்துறை அமைச்சர் சத் அல் – காஃபி டோஹாவில் நேற்று செய்தியாளர்களிடம் கூறுகையில், “ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த முடிவு நடைமுறைக்கு வருகிறது. ‘ஒபெக்’ நாடுகளின் கூட்டத்தில் இதனை அறிவிப்போம்.

மசகு எண்ணெய் வர்த்தகத்தில் எங்கள் இடத்தை நிலை நிறுத்திக் கொள்ளவே இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

எங்களது மசகு எண்ணெய் உற்பத்தியை நாளொன்றுக்கு 48 லட்சம் பரல்களில் இருந்து 65 லட்சம் பரல்களாக அதிகரிக்க முடிவு செய்துள்ளோம். அதுபோலவே திரவ இயற்கை எரிவாயு உற்பத்தியை 7.7 கோடி தொன்களில் இருந்து 11 கோடி தொன்களாக உயர்த்த முடிவு செய்துள்ளோம். இனிமேல் இயற்கை எரிவாயு வர்த்தகத்தைத் தீவிரப்படுத்த முடிவு செய்துள்ளோம்” எனக் கூறினார்.

கட்டாரின் இந்த முடிவு பெற்றோல், டீசல் விலை நிலைவரத்தில் தாக் கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிகிறது. உலக அளவில் இயற்கை எரிவாயு உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள கட்டார் அதனை அதிகரிக்கப் போவதாகவும், மசகு எண்ணெய் உற்பத்தியை கணிசமாக உயர்த்த போவதாகவும் கூறியுள்ளமை புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

மசகு எண்ணெய்ச் சந்தையைப் பொறுத்தவரை சவுதி அரேபியா உள்ளிட்ட



*கட்டார் மன்னர் ஷேக் தமீம் பின் ஹமத் அல்தானி*

நாடுகள் இடம் பெற்றுள்ள ‘ஒபெக்’ தவிர, ரஷ்யா போன்ற அந்த அமைப்பில் இல்லாத நாடுகளும் கோலோச்சி வருகின்றன. ‘ஒபெக்’ நாடுகள் உற்பத்தியை குறைத்தாலும் கூட அந்த அமைப்பில் இல்லாத மற்ற நாடுகள் உற்பத்தியை சமன் செய்து வந்த நிலையில் சவுதி அரேபியாவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே சமீபத்தில் ஒப்பந்தம் ஒன்று கையெ முத்தாகியுள்ளது. அதன்படி இருநாடுகளும் மசகு எண்ணெய் உற்பத்தியை சந்தையின் நிலைவரத்துக்கு ஏற்ப குறைக்க ஒப்புக் கொண்டுள்ளன.

மசகுஎண்ணெய்உற்பத்திகுறைப்பால் ஒக்டோபரில் 80 டொலர்களாக உயர்ந்த விலை தற்போது 60 டொலர்கள் என்ற அளவில் கட்டுக்குள் உள்ளது. சவுதி – ரஷ்யா ஒப்பந்தத்தால் கச்சா எண்ணெய் விலை உயரக்கூடும் என நிபுணர்கள் தெரிவிக் கின்றனர்.

இந்தச் சூழலில் தான் 1960களில் இருந்து ‘ஒபெக்’ அமைப்பில் அங்கம் வகித்து வரும் கட்டார் அதில் இருந்து வெளியேறப்போவ தாக அதிரடியாக அறிவித்துள்ளது. மசகு எண்ணெய்ச் சந்தையில் கோலோச்சும் சவு திக்கு ‘செக்’ வைக்கவும், அதேசமயம் தனக்கான இடத்தை நிலை நிறுத்தவும் ஈரான் பாணியில் பயணத்தை தொடங்க கட்டார் திட்டமிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் பல செய்தி வெளியிட்டுள்ளன.

மசகு எண்ணெய்ச் சந்தையில் கட்டாரின் பங்கு மிக குறைவு என்றாலும், இயற்கை எரிவாயு சந்தையில் முதலிடத்தில் உள்ள கட்டாரின் நடவடிக்கை தாக்கத்தை ஏற்படுத் தும் எனத் தெரிகிறது. மசகு எண்ணெய்யைப் பொறுத்தவரை பரல் ஒன்றின் விலை நேற்று 5.3 சதவீதம் உயர்ந்து 62.60 டாலர்களாக உயர்ந்து உள்ளது.

மசகு எண்ணெய் விலையைத் தங்கள் கட்டுப்பாட்டில் தொடர்ந்து வைத்திருக்க ‘ஒபெக்’ நாடுகளுடன் ரஷ்யா போன்றவை இணைந்து செயல்படும் நிலையில் கட்டா ரின் தனிப்பாதை எந்தஅளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது அடுத்த சில நாள்க ளில் தெரிய வரும்.

ஈரானின் மசகு எண்ணெய் வணிகத்தை முடக்கும் அமெரிக்காவின் நடவடிக்கைகள் பலன் அளிக்காத நிலையில் ஈரானைப் போலவே கட்டாரும் தனிப் பாதையில் பயணம் செய்யுமா என்ற கேள்வியும் எழுகிறது. அதுபோலவே கட்டார் எடுத்துள்ள முடிவு துணிச்சலானது என்றும், அரபு நாடுகளின் புறக்கணிப்புக்கு பிறகு அதன் பொருளாதார வலிமை குறையவில்லை என்பதை காட்டும் விதத்தில் இருப்பதாகவும் கருதப்படுகிறது.

# வன்முறைக் கருத்துக்களை கட்டவிழ்த்து விடும் பிக்குகள்




பௌத்த பிக்குகள் பல்வேறு வன்முறைக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். குறிப்பாக இவ்வாண்டு மார்ச் மாதம் தொடக்கம் பௌத்த பிக்கு ஒருவர் சிறிலங்கா முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் கருத்துக்களை முன்வைத்து வருகிறார்.

'வீட்டிலுள்ள அரிவாள் பலாப்பழத்தை மட்டும் வெட்டுவதற்குப் பயன்படாது, அதனைக் கூராக்கிக் கொண்டு களத்தில் இறங்குங்கள்' என குறித்த புத்த பிக்கு அறிவுறுத்தியிருந்தார்.

செப்ரெம்பரில், பௌத்தர்களின் புனித இடமான பீதுருதாலகால மலையில் மூன்று பேர் நிர்வாணமாக நின்றவாறு அவற்றை ஒளிப்படங்கள் எடுத்து முகப்புத்தகத்தில் பதிவு செய்திருந்த சம்பவம் தொடர்பாகவும் பௌத்த பிக்கு குறிப்பிட்டிருந்தார். இதில் சம்பந்தப்பட்ட நபர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இங்கு குறிப்பிடப்பட்ட முதலாவது சம்பவமானது 'யூ ரியூப்' மற்றும் 'வற்ஸ் அப்' போன்றவற்றில் பதிவாக்கப்பட்டன. இரண்டாவது சம்பவமானது சமூக ஊடகங்களில் அச்சுறுத்தல்கள் மற்றும் வெறுப்புக்கள் நிறைந்த கருத்துக்கள் வெளியிடப்படுவதற்கு தூண்டுகோலாக அமைந்தது.

கடந்த ஆண்டில் பௌத்த பிக்குகளால் பல்வேறு வன்முறைப் பதிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்பதிவுகள் தேசிய அரசியல், தமிழர்களுக்கு எதிரான யுத்தம் மற்றும் முஸ்லிம் எதிர்ப்புச் செயற்பாடுகளின் போது சிங்களவர்கள் கொல்லப்படுகின்றமை போன்றவற்றை உள்ளடக்கியுள்ளன. முஸ்லிம் எதிர்ப்பு வன்முறைச் செயற்பாடுகள் தற்போது அதிகரித்துள்ளன.

'எல்லா முஸ்லிம்களையும் கொல்லுங்கள், முஸ்லிம் குழந்தையைக் கூட உயிருடன் விடவேண்டாம்' என முகப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களின் ஒளிப்படங்களை பௌத்த பிக்கு ஒருவர் தனது வற்ஸ்அப்பில் வெளியிட்டிருந்தார்.

'தென்னக்கும்புர பள்ளிவாசல், முறுதலாவ பள்ளிவாசல் என்பன இன்றிரவும் பிலிமத்தலாவ மற்றும் கண்டியிலுள்ள பள்ளிவாசல்கள் நாளையும் தாக்கப்படும்' என இப்பதிவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யூ ரியூப்பில் வெளியிடப்பட்ட பிறிதொரு காணொலியில் உயர் மட்ட பௌத்த பிக்குவான கலகொட அத்தே ஞானசார தேரர் முஸ்லிம் எதிர்ப்பு வன்முறையைத் தூண்டியிருந்தார். 'முஸ்லிம்கள் ஆப்கானிஸ்தான் போன்ற பௌத்த நாடுகளை அழித்துள்ளனர். தற்போது அவர்கள் தொழுகைக்காக இங்கு வருகின்றனர். இது அவர்களுடைய கலாசாரத்துடன் நெருக்கமாக உள்ளதாக அவர்கள் கூறுகின்றனர். எங்களுடையதைப் போன்றே அவர்களுடைய நம்பிக்கையையும் உரிமை கொள்ள விரும்புகின்றனர்' என ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் வர்த்தக உரிமையாளர்கள், பௌத்தர்களுக்கு வழங்கும் உணவுகளில் கருத்தடை மாத்திரைகளைக் கலக்கின்றனர் என்கின்ற குற்றச்சாட்டானது இவ்வாண்டு ஆரம்பத்தில் முகப்புத்தகம் மூலம் பரப்பப்பட்டது.

இதேவேளையில், கண்டி மெடமகுனுவரவில் வைத்து ட்ரக் சாரதி ஒருவர் போக்குவரத்தின் போது ஏற்பட்ட சிறு முரண்பாட்டின் போது தாக்கப்பட்டார். ஆனால் முஸ்லிம்கள் குறித்த சாரதியைக் கொன்றுவிட்டனர் என பௌத்த பிக்குகள் பொய்யான தகவலைப் பரப்பியிருந்தனர். பௌத்தர்களைக் குறிவைத்து அவர்களைக் கொல்வதன் மூலம் பௌத்த பெரும்பான்மையை அழிப்பதே அவர்களின் நோக்கம் எனவும் குறிப்பி டப்பட்டது.

இலங்கை வாழ் சமூகங்களின் மத்தியில் குற்றங்கள் இடம்பெறுவதற்குத் தூண்டுகோலாக இருந்த 25 பௌத்த பிக்குகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். பொது பலசேனா, ராவண பலய, சிங்களே ராவய மற்றும் மஹாசொகோன் பலகாய போன்ற தீவிர பௌத்த குழுக்களே வன்முறையைத் தூண்டும் பதிவுகளை அதிகம் பதிவு செய்துள்ளன.

'பொது பலசேன, பௌத்த சமூகத்திற்கு கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொடுத்துள்ளது. எல்லா பௌத்த பிக்குகளும் வன்முறையாளர்கள் என மக்கள் கருதுகின்றனர். பௌத்த பிக்குகள் சிலர் இந்த நாட்டைப் பாதுகாப்பதற்கு தமது அறிவைப் பயன்படுத்துகின்றனர். சிலர் வன்முறையைப் பயன்படுத்து கின்றனர். ஆனால் பௌத்தத்தில், தீவிரவாதத்திற்கு இடமில்லை'

தாய்நாட்டைப் 'பாதுகாத்தல்' என்கின்ற விடயத்தை முதன்மைப்படுத்தி கல்வியறிவற்ற, தொழில்வாய்ப்பற்ற அடித்தட்டு இளைஞர்களை பௌத்த பிக்குகள் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர். 'இந்த இளைஞர்கள் இளமையாகவும் ஆவேசம் கொண்டவர்களாகவும் உள்ளனர்' என மூத்த பிக்கு ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் நாட்டில் வன்முறை இடம்பெற்றதைத் தொடர்ந்து சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டு இலங்கை அரசாங்கத்தால் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. சிறிலங்காவில் முகப்புத்தகத்தைப் பயன்படுத்தும் 55,00,000 பாவனையாளர்களிடம் சிங்களத்தை முதன்மைப்படுத்தும் பதிவுகளைப் பதிவு செய்யுமாறும் கேட்கப்பட்டது. முகப்புத்தகப் பக்கங்கள் சில செயலற்றுப் போயின. முகப்புத்தக தகவல்கள் பொது பலசேனாவால் செயற்படுத்தப்பட்டன.

'முகப்புத்தகத்தில் பௌத்த தீவிரவாதப் பக்கங்கள் மற்றும் குழுக்கள் பௌத்த பிக்குகளால் தான் உருவாக்கப்பட்டன என்பதை எம்மால் உறுதிப்படுத்த முடியவில்லை. பௌத்த பிக்குகளின் பெயரில் முகப்புத்தகத்தில் தனிப்பட்ட கணக்குகளும் பொதுப் பக்கங்களும் உள்ளன என்பதை நாம் கண்டறிந்தோம்' என மாற்றுக்கொள்கைகளுக்கான மையத்தைச் சேர்ந்த அமலினி டீ சர்யா தெரிவித்தார்.

2009ல் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரே இந்த நாட்டில் 'மத மோதல்கள்' ஆரம்பமாகின என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். 1980களில் இவ்வாறான மத மோதல்கள் ஏற்பட்டன என்றும் அதற்குப் பின்னர் 20 ஆண்டுகள் கழித்து 2009ன் பின்னர் மீண்டும் மத சார் மோதல்கள் இடம்பெறுகின்றன என்றும் கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் 'இனத்துவ கற்கைகளுக்கான அனைத்துலக மையம்' தெரி வித்துள்ளது.

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னரே பொது பலசேன போன்ற தீவிர பௌத்த அமைப்புக்களின் செயற்பாடுகள் வலுவடைந்துள்ளன. முஸ்லிம்கள் பௌத்தர்களுக்குச் சொந்தமான தாது கோபுரங்களைக் குறிவைத்து தாக்குவதாகவும் பௌத்த கொலனிகளை அழிப்பதாகவும் தமது புனித மரமான அரச மரங்களை வெட்டுவதாகவும் எல்லா இடமும் பள்ளிவாசல்களை அமைப்பதாகவும் தீவிரவாத பௌத்தர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

ஆனால் பாரம்பரியமாக நோக்கில், சிறிலங்கா வாழ் முஸ்லிம்கள், சிங்கள பௌத்தர்களுடன் நெருக்கமான தொடர்பைப் பேணிவந்துள்ளனர்.

காலத்திற்குக் காலம் தாம் தான் இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் எனவும் இதனால் இந்த நாட்டை தாமே ஆள வேண்டும் எனவும் சிங்கள பௌத்தர்கள் வாதிடுகின்றனர். சிங்கள பௌத்தர்களுக்கு எனத் தனியான நாடு எதுவும் இல்லை எனவும் உலகில் சிங்கள பௌத்த இனமானது சிறுபான்மையாகக் காணப்படுவதாகவும் இதனால் தமது இனத்தைப் பாதுகாக்க வேண்டும் எனவும் தீவிர சிங்கள பௌத்தர்கள் கூறுகின்றனர்.

தமது இனத்தைப் பாதுகாப்பதற்கான சிங்கள பௌத்தர்கள் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற அதேவேளையில் இதனை பௌத்த பிக்குகள் தீவிரமாக முன்னெடுப்பதால் வன்முறைகள் தோன்றுகின்றன.

'ஆரம்ப காலங்களில் பௌத்த பிக்குகள் கிராம ஆலயங்களில் முக்கிய பங்கு வகித்தனர். இவர்கள் கிராமங்களின் தலைவர்களாக நோக்கப்பட்டனர். காலப்போக்கில் ஆலயங்கள் தொடர்பற்றவையாக மாறின. ஆனால் சமூகத்தில் தாம் இழந்த அடையாளத்தை மீளப் பெற வேண்டும் என பிக்குகள் விரும்பினர். இதற்கு அவர்கள் மதம் என்கின்ற கருவியைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

இதனால் இவர்கள் சிறிலங்காவில் உள்ள முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் பௌத்தர்கள் அவர்களது சொந்த நாட்டில் அழிவடையப் போகின்றனர் என்கின்ற அச்சுறுத்தலை விடுக்கின்றனர்' என சமூக விஞ்ஞானியான பத்திராஜா விளக்கம் கூறுகிறார்.

'ஞானசார தேரரிடம் அவரது பேச்சு முறையை மாற்றுமாறு நான் கேட்ட போது, நான் அதற்கு முன்னர் கேட்டிராத கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தினார்' என பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்டார்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளின் முற்பகுதியில், சிறிலங்காவில் பௌத்த மறுமலர்ச்சியின் தந்தை எனக் குறிப்பிடப்படும் அநகாரிகதர்மபால பல பௌத்த பாடசாலைகளை நிறுவியமையுடன் சிங்கள மொழி மற்றும் பௌத்தத்தை பலப்படுத்தும் பணிகளிலும் ஈடுபட்டார். 1972இல் சிறிலங்காவில் குடியரசு சாசனம் உருவாக்கப்பட்டபோது, அதில் பௌத்தத்திற்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. புத்த சாசனத்தைப் பாதுகாக்க வேண்டியது இந்த நாட்டின் தலையாய கடமை என வலியுறுத்தப்பட்டது.

வன்முறைகளைத் தூண்டும் பௌத்த பிக்குகளுக்கும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கும் என்ன தொடர்பு என்பது தொடர்பாக கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் இனக்கல்விக்கான அனைத்துலக மையத்தின் நிறைவேற்று இயக்குநர் மேரியோ கோமேஸ் குறிப்பிட்டார்.

' 2009 – 2015 வரையான மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பௌத்த தீவிரவாத அமைப்புக்கள் தமது செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோட்டாபய ராஜபக்ஷ பொது பலசேன அமைப்புடன் மிக நெருக்கமான தொடர்பைப் பேணியிருந்தமை சான்றாக உள்ளதாகவும் கோட்டாபய ராஜபக்ஷ, 2013ல் இடம்பெற்ற பொது பலசேனவின் பௌத்த தலைமைத்துவ கற்கையான மெத் செவன நிகழ்விற்குப் பிரதம அதிதியாகவும் பங்கெடுத்திருந்தார்' என தெரிவித்தார்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள மிகவேகமான அரசியல் மாற்றம் காரணமாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தீவிர பௌத்த பிக்குகள் அங்கிருந்து விடுவிக்கப்பட்டு விடுவார்களோ என்கின்ற அச்சம் நிலவுகிறது.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள பொது பலசேனவின் நிறுவுநரான ஞானசார தேரரிற்கு பிணையில் விடுவிக்குமாறு கோரி மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'பொது பலசேன, பௌத்த சமூகத்திற்கு கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொடுத்துள்ளது. எல்லா பௌத்த பிக்குகளும் வன்முறையாளர்கள் என மக்கள் கருதுகின்றனர். பௌத்த பிக்குகள் சிலர் இந்த நாட்டைப் பாதுகாப்பதற்கு தமது அறிவைப் பயன்படுத்துகின்றனர். சிலர் வன்முறையைப் பயன்படுத்து கின்றனர். ஆனால் பௌத்தத்தில், தீவிரவாதத்திற்கு இடமில்லை' என இளம் பௌத்த பிக்குவான ரத்ன நந்த பன்ரே குறிப்பிட்டார்.

ஆங்கிலத்தில் – **Sonia Sarkar**
வழிமூலம் – **The telegraph**
மொழியாக்கம் – நித்தியபாரதி

# குற்றப் பிரேரணையே ஒரே வழி! மைத்திரியைச் சாடுகிறார் மங்கள

கொழும்பு, டிசெ. 06

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது வகைதொகையின்றிக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து கடுமையாக விளாசித்தள்ளிய சுதந்திரக் கட்சித் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, ஐ.தே.க. பதிலடி கொடுத்துள்ளது.

மைத்திரி ஆட்சிக்குப் பொருத்தமற்றவர். அவருக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவருவதே ஒரே வழி என்று ஐ.தே.கவின் மூத்த உறுப்பினரான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ள அவர்,



சுதந்திரக்கட்சி மாநாட்டில் ஜனாதிபதி நிகழ்த்திய உரையானது அவர் ஆட்சிக்குப் பொருத்தமற்றவர் என்பதை நியாயமான சந்தேகங் களுக்கு அப்பால் நிரூபிக்கிறது. பொய்கள், மேலும் பொய்கள் மற்றும் முரண்பாடு, உணர்ச்சிவசம் மற்றும் பாரபட்சம் ஆகியவை அவருடைய வரிசைப்பாட்டிலும் ஒழுங்கமைப்பிலும் பொருந்தியது. குற்றவியல் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதே ஒரே தீர்வு என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, பிரதான கட்சியாக விளங்கிய சுதந்திரக் கட்சியை மூன்றாம் நிலைக்கு தள்ளிய மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக்கட்சி குறித்தும் அதன் தலைவர் பற்றியும் பேசுவது கேலிக்கூத்தாகும் என்றும் ஐ.தே.க. உறுப்பினர்கள் விமர்சித்து வருகின்றனர். (ஐ)

# வேறு நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை ஏற்கோம்!

## கூறுகிறார் டிலான் பெரேரா

கொழும்பு, டிசெ. 06

உயர்நீதிமன்றினால் வழங்கப்படும் தீர்ப்பைத் தவிர, வேறு எந்த நீதிமன்றினாலும் வழங்கப்படும் தீர்ப்புகளை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என மஹிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்–

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவு தொடர்பில் நீதிமன்றைச் செயற்பாடுகளுக்கு நாம் மரியாதை அளிப்பதனால் அப்பதவிகளில் தொடர்ந்தும் இருந்து கொண்டு அதிகாரத்தை மாத்திரம் பயன்படுத்தாமல் செயற்படுவோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு வழங்கிய கடிதத்தில் பிரதமராக ரணிலை நியமிக்கக் கோரி எங்கும் குறிப்பிடவில்லை. இந்நிலையில், உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு எதிராக வந்தாலும் மீண்டும் ரணிலைப் பிரதமராக நியமிக்கவேண்டிய அவசியம் ஜனாதிபதிக்குக் கிடையாது– என்றார். (ஐ)

# வவுனியாவில் இளம்பெண் மாயம்!

வவுனியா, டிசெ. 06

வவுனியாவில் வேலை தேடிச் சென்ற, இளம் பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார் என கடந்த திங்கள் இரவு 11 மணியளவில் பொலிஸ் நிலையத்தில் இளம்பெண்ணின் தந்தையினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிகுளம் வீரபுரம் பகுதியில் வசித்து வரும் ஜெயராஜ் நிஷாந்தினி என்ற 19 வயதுடைய இளம் பெண்ணே கடந்த திங்கள் முற்பகல் 10 மணியளவில் வீட்டிலிருந்து வவுனியாவுக்கு வேலை தேடிச் செல்வதாகத் தெரிவித்துவிட்டுச் சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் மகள் வீடு திரும்பாததையடுத்து அன்று இரவு 11 மணியளவில் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் அவரது தந்தை ஜெயராஜ் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் காணாமல்போன யுவதி தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# வடமாகாண திணைக்களங்களிலுள்ள பதவி நிலைகளுக்கு 41 பேர் நியமனம்

யாழ்ப்பாணம், டிசெ. 06

பயிற்சித்தர அபிவிருத்தி உத்தியோத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் மாகாண கணக்காய்வு உத்தியோத்தர்கள் ஆகிய பதவி நிலைகளில் 41 பேருக்கான நியமனக் கடிதங்களை வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே வழங்கவுள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபைக் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 31 பேரும் முகாமைத்துவ உதவியாளர்கள் 8 பேரும் பதவி உயர்வு பெற்ற கணக்காய்வு உத்தியோகத்தர்கள் இருவரும் என 41 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

# தலை குனியவேண்டும் சர்வாதிகாரி மைத்திரி

## ராஜித கடும் விமர்சனம்

கொழும்பு, டிசெ. 06

நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சர்வாதிகார ஆட்சி நடத்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெட்கப்பட்டு – அவமானப்பட்டுத் தலைகுனியவேண்டும் என்று ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாட்டில் இன்று பிரதமரும் இல்லை; அமைச்சரவையும் இல்லை. எனவே, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட ஐக்கிய தேசிய முன்னணியே மீண்டும் ஆட்சியமைக்க வேண்டும். ஜனாதிபதி இதற்குத் தடையாக இருக்கின்றார். எனவே, அவர் பதவியிலிருந்து விலக வேண்டும் அல்லது ஆட்சியை எங்களிடம் ஒப்படைக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.



அலரி மாளிகையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சுக்களின் செயலாளர்களை அழைத்துப் பேசவோ அல்லது அவர்களுக்கு ஆணையிடவோ ஜனாதிபதிக்கு இப்போது அதிகாரம் இல்லை. நீதிமன்ற உத்தரவை அவர் மதிக்கவேண்டும்.

நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்க வேண்டும் எனத் தொடர்ந்து அழுத்தம் வழங்கினால் தான் பதவி விலகவேண்டி வருமென ஜனாதிபதி எங்களிடம் சொன்னார். அது அவரின் இஷ்டம். பதவி விலகவேண்டுமெனில் அவர் உடன் பதவி விலகட்டும். அந்த நிலைமையை அவரே உருவாக்கிவிட்டார்.

ஜனாதிபதியின் சர்வாதிகார ஆட்சியால் நாடு இன்று மோசமான நிலையை அடைந்துள்ளது. இந்நிலையில், அரசை எப்படி எடுப்பது என்பது எங்களுக்குத் தெரியும். எங்களை அந்த நிலைக்கு தள்ளாமல் ஆட்சியை எங்களிடம் ஜனாதிபதி ஒப்படைக்க வேண்டும்– என்றார். (ஐ)

# முன்னாள் போராளிகள் கைதுக்கு எதிராகக் கிழக்கில் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, டிசெ. 06

மட்டக்களப்பு – வவுணதீவில் இரு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் போராளிகள் கைது செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.




தமிழர் ஜனநாயக அமையம் எனும் அமைப்பினரால் இந்தப் போராட்டம் நேற்று முன்தினம் காலை நடத்தப்பட்டது.

வவுணதீவில் பொலிஸார் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டு வரும் நிலையில், இதன் மூலம் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் எனச் சுட்டிக்காட்டியே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

'எமது வாழ்வோடு அரசியல் பகடை ஆடாதீர்கள்', 'நீங்கள் எமக்காய் உங்கள் வாழ்க்கையைத் தொலைத்தீர்கள்–நாம் உம்மோடு' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பல சிவில் சமூகக் குழுக்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள போராளிகளின் பாதுகாப்புக் கருதிய கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகொல்லாகமவிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

# மாகாண ஆட்சியிலும் மைத்திரிக்கு சோதனை

## ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இருவர் ஐ.தே.க. பக்கம் தாவல்

கொழும்பு, டிசெ. 06

மேல் மாகாண சபை உறுப்பினர்களான நவுசர் பௌசி, கீர்த்தி காரியவசம் ஆகியோர், ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர். நேற்று முன் தினம் சபை அமர்வின்போது இருவரும் தமது நிலைப்பாட்டை அவைக்குத் தெரியப்படுத்தினர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆளுகையின் கீழேயே மேல் மாகாண சபை இயங்கி வருகின்றது. அதன் முதல்வரான இசுறு தேவப்பிரிய மைத்திரியின் தீவிர விசுவாசிகளுள் ஒருவராவார்.

தற்போதுள்ள நிர்வாகத்தினருடன் தம்மால் பணிபுரிய முடியாது. எனவே, ஆளும்கூட்டமைப்பு மற்றும் அதன் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், எதிர்க்கட்சிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தோம் என்று இருவரும் அறிவித்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் வகையில் சுயாதீனமாக இயங்க முடிவெடுத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பௌஸியின் மகனே நவுசர் பௌசியாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பலாத்காரம் செய்தது உண்மை மனம் திறந்தார் ரொனால்டோ

அமெரிக்க மொடல் அழகியை அவரது எதிர்ப்பையும் மீறி பாலியல் பலாத்காரம் செய்தது உண்மைதான் என உதைபந்து ஜாம்பவான் ரொனால்டோ முதன் முறையாக மனம் திறந்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு உதைபந்து ஜாம்பவான் ரொனால்டோ தன்னைப் பாலியல் பலாத்காரம் செய்தார் என அமெரிக்க மொடல் அழகி மயோர்க்கா வெளியிட்ட தகவல் புயலைக் கிளப்பியது.

ஆனால் மொடல் வெளியிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் பொய் எனவும், புகழ் பெறும் நோக்கில் பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் ரொனால்டோ மறுப்பு தெரிவித்திருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளம் மொடல் நீதிமன்றத்தை நாட இருப்பதாகவும், ரொனால்டோ தொடர்பான மேலதிக தகவல்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

மட்டுமின்றி இந்த விவகாரம் வெளியே கசியாமல் இருக்க 3 கோடி ரூபா வரை ரொனால்டோ தமக்கு அளித்ததாகவும் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.



தற்போது இச்சம்பவம் தொடர்பாக ரொனால்டோவுக்கும் அவரது வழக்கறிஞருக்கும் இடையே நடைபெற்ற வாக்குவாதம் ஒன்றை ஜேர்மனி நாளேடு ஒன்று வெளியிட்டுள்ளது.

அதில், தாம் பலாத்காரம்செய்ததுஉண்மைதான் எனவும், அந்த மொடல் தம்மை விட்டு விடக் கெஞ்சினார் எனவும் ரொனால்டோ வெளிப்படுத்தியுள்ளார்.

அப்போது 25 வயதேயானமயோர்க்கா மொடலிங் துறையில் அறிமுகமான காலம். ரெய்ன் இரவு விடுதியிலும் அவர் பணியாற்றி வந்துள்ளார்.

பாம்ஸ் ரிஸார்ட்டில் உள்ள பிரபலங்களுக் கானபகுதியில்மயோர்க் காவைத் தனியாக சந்தித்த ரொனால்டோ, தமது தனிப்பட்ட அறையான எண் 57306 இற்கு இரவு தனியாகச் சந்திக்க முடியுமா என அழைப்பு விடுத்துள் ளார்.


ஆனால் மாற்று உடை ஏதும் இல்லை என்பதால் தமக்கு வர முடியாது எனக் கூறிய மயோர்க்காவை உடைக்கு ஏற்பாடு செய்கிறேன் எனவும் ரொனால்டோ நிர்ப்பந்தித்துள்ளார்.

இதனிடையே, இரவு ரொனால்டோவின் அறைக்குத் தனியாகச் சென்ற மயோர்க்காவிடம் பாலியல் உறவுக்கு ரொனால்டோ நிர்பந்தித்துள்ளார்.

ஆனால் மயோர்க்கா அதற்கு மறுப்பு தெரிவிக்கவே, முத்தம் மட்டும் போதும் விட்டுவிடுகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் மயோர்க்காவை நிர்ப்பந்தித்து அவருடன் ரொனால்டோ பாலியல் உறவு வைத்துக் கொண்டுள்ளார். தொடர்ந்து நடந்த சம்பவத்துக்கு மன்னிப்பும் கோரியுள்ளார் ரொனால்டோ.

# கௌதம் கம்பீர் ஓய்வு



இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான கௌதம் கம்பீர், அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளிலும் இருந்து ஓய்வுப் பெறுவதாக அறிவித்துள்ளார்.

37 வயதான கௌதம் கம்பீர், தனது வயது, உடற்தகுதி, திறன் நிலை, இளம் வீரர்களுக்கு அணியில் வழிவிடுதல் போன்ற பல்வேறு காரணங்களை முன்னிறுத்தி இந்த ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அத்தோடு, கடந்த சில வருடங்களாகச் சர்வதேச அணியில் இடம் கிடைக்காத நிலையில் அவர் இந்த முடிவை எடுத்திருக்க கூடுமெனவும் கூறப்படுகின்றது.

கம்பீர் இறுதியாக 2016ஆம் ஆண்டு ராஜ்கோட்டில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடினார். தற்போது டில்லி அணிக்காக உள்ளூர் தொடர்களில் விளையாடி வருகிறார்.

நடப்பு ஆண்டில் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில், டில்லி அணிக்காக விளையாடிய கம்பீர், சிறப்பாகச் செயற்படாததன் காரணமாக அணியின் தலைவர் பொறுப்பை அதிரடியாக இராஜினாமா செய்ததோடு, அதன் பிறகு போட்டிகள் எதிலும் விளையாடாமலும் இருந்தார்.

இவ்வாறான கடும் அழுத்தங்களுக்கு மத்தியிலேயே அவர் இந்தக் கடுமையான முடிவை எடுத்திருக்கக் கூடுமென கூறப்படுகின்றது.

2003ஆம் ஆண்டு பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமான கௌதம் கம்பீர், இதுவரை 147 போட்டிகளில் விளையாடி 5238 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இதில் 11 சதங்கள், 34 அரைசதங்கள் அடங்கும். சராசரி 39.68 ஆகும். அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 150 ஆகும்.

2004ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமான கம்பீர், இதுவரை 58 போட்டிகளில் விளையாடி 4154 ஓட்டங்களை குவித்துள்ளார்.

இதில் ஒரு இரட்டை சதம், 9 சதங்கள், 22 அரைசதங்கள் அடங்கும். சராசரி 41.96 ஆகும். அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 206 ஆகும்.

2007ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்து அணிக்கெதிரான ரி -20 போட்டியில் அறிமுகமான கம்பீர், இதுவரை 37 போட்டிகளில் 932 ஓட்டங்களை குவித்தார். இதில் 7 அரைசதங்கள் அடங்கும். சராசரி 27.41 ஆகும். அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 75 ஆகும். இடது கை துடுப்பாட்ட வீரரான கம்பீர், தான் விளையாடிய காலகட்டத்தில் சிறந்ததொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரராக திகழ்ந்தார்.

கடந்த 15 ஆண்டுகால கிரிக்கெட் வாழ்க்கையில் அவர் நிகழ்த்திய சாதனைகளும் ஏராளம். அதுமட்டுமன்றி அணியின் முக்கிய போட்டிகளில் வெற்றி பெறுவதற்கு கம்பீர் பலமுறை துணை நின்றுள்ளார்.

குறிப்பாக இந்திய அணி 2007ஆம் ஆண்டு ரி - 20 உலகக் கிண்ணத்தை வெல்லும்போது 57 ஓட்டங்கள் அடித்து முத்திரை பதித்தார். அதேபோல, 2011ஆம் ஆண்டு 50 ஓவர் உலகக்கிண்ணத்தை வெல்லும்போது 97 ஓட்டங்கள் குவித்து முத்திரை பதித்தார்.

சர்வதேச கிரிக்கெட்டையும் தாண்டி, இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். ரி-20 லீக் தொடரில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியை சிறப்பாக வழிநடத்திய கம்பீர், 2012ஆம் மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் அணிக்காக சம்பியன் கிண்ணங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த நான்காவது வீரர் மற்றும் ஐ.பி.எல். போட்டிகளில் அதிக பவுண்ரிகள் பெற்றுள்ள வீரர் என்ற பெருமைகளும் இவரையே சாரும்.

# அவதூறு வழக்கில் கிறிஸ் கெயிலுக்கு 3 லட்சம் ஆஸி. டொலர்கள் நட்டஈடு!



மேற்கிந்தியத் தீவு அணியின் அதிரடி ஆட்டக்காரரான கிறிஸ் கெய்ல் அரைநிர்வாணச் சர்ச்சை விவகாரத்தில், பெயார்பெக்ஸ் நிறுவனம் சரியான ஆதாரங்களை முன்வைக்கத் தவறியதால், அவருக்கு 3 லட்சம் ஆஸ்திரேலிய டொலர்களை நட்ட ஈடாக வழங்கவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து கடந்த 2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியை நடத்தின. இந்தத் தொடரின்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியின் உடை மாற்றும் அறைக்குப் பெண் ஒருவர் வந்திருந்தபோது, கிறிஸ் கெய்ல் அரை நிர்வாணமாக இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக பெயார்பெக்ஸ் ஊடக நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது. அதில், பெண் ஒருவர் தற்செயலாக மேற்கிந்தியத் தீவுகளின் உடை மாற்றும் அறைக்குச் சென்றிருந்த போது கிறிஸ் கெயில் தன்னுடைய இடுப்பை மறைப்பதற்காக அணிந்திருந்த துவாயை அகற்றி அரை நிர்வாணமாகத் தனது அந்தரங்க உறுப்பைக் காட்டியதாகவும், பெண்ணிடம் தகாத வார்த்தைகளால் பேசியதாகவும் குறிப்பிட்டிருந்தது.

அதன் பின் இந்த செய்தி அனைத்து ஊடகங்களிலும் பரபரப்பாகப் பேசப்பட்டது. ஆனால் கிறிஸ் கெய்லோ இந்தச் செய்தி உண்மை இல்லை எனவும், அந்த ஊடகத்திற்கு எதிராக வழக்கு தொடரப் போவதாகவும் அறிவித்தார்.

இதையடுத்து கடந்த ஆண்டு ஆஸ்திரேலியாவின் இந்த விவகாரம் தொடர்பாக நியூவ் சௌத் வேல்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை நான்கு பேர் கொண்ட நீதிபதிகள் விசாரணை நடத்தி வந்த நிலையில், நேற்று முன் தினம் நீதிமன்றம் விசாரணைக்கான தீர்ப்பை அறிவித்தது.

அதில், கிறிஸ் கெயில் நடந்துக்கொண்டமைக்கான சரியான ஆதாரங்கள் மற்றும் சாட்சிகளைப் பெயார்பெக்ஸ் நிறுவனம் முன்வைக்கத்தவறியுள்ளது.

இதனால், உலகின் முன்னணி கிரிக்கெட் வீரர் ஒருவர் எதிராக, சாட்சியங்கள் இல்லாமல் செய்தியை வெளியிட்டதற்காக 3 இலட்சம் ஆஸ்திரேலிய டொலர்களை நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என உத்தரவிட்டது.

இருப்பினும் பெயார்பெக்ஸ் ஊடகம், இந்த தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# வாழ்க்கைத் துணையான சந்துனியை கரம் பற்றினார் தனஞ்சய டி சில்வா



இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் தனஞ்சய டி சில்வா தனது வாழ்க்கைத் துணையான சந்துனியை கரம்பிடித்துள்ளார்.

இருவரும் கடந்த திங்கட்கிழமை பதிவுத்திருமணம் செய்துகொண்ட நிலையில் ரங்கண ஹேரத்தும் லசித் மலிங்கவும் பதிவுத் திருமணத்தில் கையொப்பமிட்டிருந்தனர்.

இலங்கை அணி நியூசிலாந்து செல்வதற்கு முன்னர் தனஞ்சய டி சில்வா பதிவுத் திருமணம் செய்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய சரத் பொன்சேகா எம்.பி., ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கடுமையாக விமர்சித்தார். ஒரு கட்டத்தில் ஜனாதிபதியை 'பைத்தியக்காரர்' (மன நோயாளி) என்று கூட விளாசித் தள்ளினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசிய முன்னணியின் கட்சித் தலைவர்களைச் சந்தித்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, என் பெயரை விளித்து விமர்சித்துள்ளார். 2010ஆம் ஆண்டு சரத் பொன்சேகா ஜனாதிபதியாகியிருந்தால் இவ்வாறு கட்சித் தலைவர்களை அழைத்துப் பேச்சு நடத்தியிருக்கமாட்டார் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவில் நான் ஜனாதிபதி ஆகியிருந்தால், தற்போதைய ஜனாதிபதி போல் செயற்பட்டிருக்கமாட்டேன். அரசமைப்பை அப்பட்டமாக மீறும் வகையில் தீர்மானங்களை எடுத்திருக்கமாட்டேன். ரணில் விக்கிரமசிங்கவின் காலைவாரியிருக்கமாட்டேன். ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து மெதமுலனையில் ஜன்னலில் தொங்கிக்கொண்டிருந்த நபரை மீண்டும் பிரதமர் பதவியில் அமர்த்தியிருக்கமாட்டேன். வாரம் ஒரு தடவை வெளிநாட்டுக்குப் பயணம் செய்யமாட்டேன். யாரோ எழுதிய புத்தகத்தை 'ஜனாதிபதி தாத்தா' என்று பெயர் வைத்து மகளின் பெயரில் வெளியிட்டிருக்கமாட்டேன்.

இரவில் ஒன்றையும், காலையில் வேறொன்றையும் ஜனாதிபதி மைத்திரி பேசி வருகின்றார். அமெரிக்கா போன்ற நாடுகளில் அரச தலைவர், படைத் தளபதிகள் ஆகியோர் ஆண்டு தோறும் மனநலப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அதேபோல் இங்குள்ளவர்களுக்கும் செய்ய வேண்டும்.

மனநோயாளியான ஜனாதிபதி இரண்டு வாரங்கள் அங்கொடையில் சிகிச்சை பெற்றாலும் பரவாயில்லை. அதற்கு ஏற்ற வகையில் சட்டத்தில்கூட திருத்தம் செய்யலாம் – என்றார். (ஐ)

## ஜனநாயகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்றும் அவரை விளாசித்தள்ளியுள்ளார்.

கட்சிக்குள்ளேயே ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியாத அவர், நாட்டில் எவ்வாறு ஜனநாயகத்தை நிலைநாட்டுவார். அதற்கான இயலுமை அவரிடம் இல்லை என்று ஜனாதிபதி சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின்போது, ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

நாட்டின் சட்டம் மற்றும் ஜனநாயகம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் ரணில் விக்கிரமசிங்க, முதலில் தமது கட்சிக்குள் ஜனநாயக நீதியில் செயற்பட வேண்டும். பின்வரிசை எம்.பிக்களுக்கு அவர் உரிய வாய்ப்பு வழங்குவதில்லை என்றும் மைத்திரி விமர்சித்தார்.

அதேவேளை, நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் மக்களுக்கான சேவைகளை எவ்வித இடையூறுமின்றி முன்னெடுப்பதற்கு ஆலோசனை வழங்கியுள்ளார். நிதியாண்டிற்காக ஒதுக்கியுள்ள அனைத்து நிதியையும் உரிய முறையில் செலவிட்டு, மக்களின் தேவைகளை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி இதன்போது ஆலோசனை வழங்கியுள்ளார். (ஐ)

## கருவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காகச் சமராடிய சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு நோபல் பரிசும், ஐ.நா. பொதுச் செயலாளர் பதவியும் வழங்கப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி பரிந்துரை முன்வைத்துள்ளது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போது கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் காமினி ஜயவிக்கிரம பெரேரா–

பக்கச்சார்பின்றிச் செயற்படும் எமது சபாநாயகருக்கு நோபல் பரிசு கிடைக்கவேண்டும். அதுமட்டமல்ல, ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்கும் அவர் தகுதியுடையவர் – என்று குறிப்பிட்டார். (ஐ)

## காருக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கஞ்சாவுடன் 5 பேரைக் கைது செய்துள்ளனர் என ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 3.45 மணியளவில் இந்த ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற சொகுசுக் காரை வழிமறித்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது பொதி செய்யப்பட்டு மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட 2கிலோ 50கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

இந்தக் காரில் பயணித்த சோமசுந்தரம் பிரதீப் (வயது 31, பரந்தன்), சோதசுந்தரம் பிரதீபன் (வயது 29, பரந்தன்), திருவழகன் சதீஸ்குமார் (வயது 18, பரந்தன்), ரவீந்திரன் சதீஸ் (வயது 34, நிலாவெளி) தேனபந்கே அமரகீர்தி கிஷாந்த (வயது 44, திருகோணமலை) ஆகியோர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஓமந்தைப் பொலிஸார் கூறினர். (ஐ-100)

## நாடாளுமன்றக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சிறிசேனவின் உத்தரவுசட்டவிரோதமானது என்றும், பொதுத் தேர்தலை நடத்துவதற்குத் தடை விதிக்கக் கோரியும், தாக்கல் செய்யப்பட்ட 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஏழு பேர் கொண்ட அமர்வு முன்பாக நேற்றும் இடம்பெற்றது.

இதன்போது மனுக்கள் மீதான தனது தரப்பு அறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்த சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, இந்த மனுவை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை என்று நீதிமன்றில் தெரிவித்தார்.

ஜனாதிபதி அரசமைப்பை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து அரசமைப்பின் 38 (2) அ சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகச் சட்டமா அதிபர் நீதிமன்றில் கூறினார்.

அத்துடன் ஜனாதிபதி அரசமைப்பை மீறி இருந்தால் அது தொடர்பாக நாடாளுமன்றத்தால் மாத்திரமே நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.

பிரதம நீதியரசர் நளின் பெரேரா உள்ளிட்ட பிரியந்த ஜயவர்த்தன, பிரசன்ன ஜயவர்தன, சிசிரடி ஆப்று, விஜித்மலல் கொட, புவனேக அலுவிஹாரே மற்றும் முருடு பெர்னாண்டோ ஆகிய ஏழு நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த விசாரணை நடைபெற்றது. (ஐ)

## நல்லதொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கலைப்பு தொடர்பாக, உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்று வரும் விசாரணைகள் தொடர்பில், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி தனக்கு இல்லாத அதிகாரத்தைப் பயன்படுத்தி, நாடாளுமன்றத்தைக் கலைத்த போது, நீதிமன்றமே எம்மை நாடாளுமன்ற உறுப்பினர்களாகச் செயற்பட வைத்து, அங்கே செல்லக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தது. நீதித்துறையானது இலங்கையில் சுயாதீனமாகவும், நேர்மையாகவும் செயல்படுகின்றது என்பதை நாங்கள் நம்புகின்றோம்.

ஜனாதிபதிதான் செய்த தவறை மீண்டும் திருத்திக் கொள்ளுமாறு கேட்டிருந்தோம். அரசமைப்பில் அவரால் போடப்பட்டுள்ள ஓட்டையை அவரே சரி செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த விடயத்தில் நாங்கள் விடாப்பிடியாக இருக்கின்றோம் – என்றார். (ஐ)

## ஜனாதிபதிப் பத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார் என மனோ குறிப்பிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ 'டுவிட்டர்' தளத்தில் முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் எம்.பி நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தை ஜனாதிபதி கூறியபோது, அந்தக் கலந்துரையாடலில் என்னுடன் எம்.பிக்களான சஜித் பிரேமதாஸ, ராஜித சேனாரத்ன, லக்ஷ்மன் கிரியெல்ல, ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், பழனி திகாம்பரம், கபீர் ஹாசீம், ரவி கருணாநாயக்க, அகிலவிராஜ் காரியவசம், மலிக் சமரவிக்கிரம, கயந்த கருணாதிலக, அர்ஜுன ரணதுங்க ஆகியோரும் இருந்தார்கள் என்று மனோ கணேசன் மேலும் கூறியுள்ளார். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எம்.பியான முஜிபூர் ரஹ்மான் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபைஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஓரணியில் திரண்டு கோரினாலும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்கமாட்டேன் என ஜனாதிபதி கூறிவருகின்றார். அவர் எந்த அடிப்படையில் இவ்வாறு பேசுகிறார் என தெரியவில்லை.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை தரப்பின் கருத்துக்கு செவிசாய்க்கமுடியாவிட்டால், பதவியை துறந்து வீட்டுக்குச் செல்வதே சிறந்த தீர்வாக அமையும் என்றார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிறப்பு மாநாட்டின்போது ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை கடுமையாக தாக்கி உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஐக்கிய தேசியக்கட்சி எம்.பிக்கள் சிலர் நேற்றுச் சபையில் உரையாற்றினர். (ஐ)

## சரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டத்தைப் பறிக்குமாறு கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகள் சில , ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளன என அறியமுடிகின்றது.

ஜனாதிபதியைக் கொலை செய்யும் சூழ்ச்சித் திட்டத்துடன் தொடர்பு, இராணுவ இரகசியங்களை அம்பலப்படுத்தி வருகின்றமை உட்பட மேலும் சில விடயங்களை அடிப்படையாகக் கொண்டே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும், இதுவிடயம் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன வென்பது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வமாகத் தகவல்கள் வெளியாகவில்லை.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்தவை எதிர்த்து, எதிர்க்கட்சிகளால் பொது வேட்பாளராக சரத் பொன்சேகா களமிறக்கப்பட்டார். அந்தத் தேர்தலில் அவர் தோல்வியடைந்த பின்னர் மஹிந்த தரப்பால் சிறைப் பிடிக்கப்பட்டார். ஓராண்டுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் – சர்வதேச அழுத்தங்கள் வலுத்ததால் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் ஜனநாயகக் கட்சி என்ற புதிய கட்சியைச் சரத்பொன்சேகா ஆரம்பித்தார். மாகாண சபைத் தேர்தலில் வெற்றிநடை போட்டாலும் அதன் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் பிரகாசிக்கவில்லை. இதனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் சங்கமித்தார் பொன்சேகா. இதையடுத்து அவருக்கு தேசியப் பட்டியல் ஊடாக எம்.பி பதவி வழங்கப்பட்டு – அதன் பின்னர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டது.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் ஜனாதிபதியால் பீல்ட் மார்ஷல் என்ற பட்டமும் வழங்கப்பட்டது. இராணுவத்தில் மிகவும் உயரிய தர உயர்வாகக் கருதப்படும் இந்தப் பதவியை இலங்கையில் வகிக்கும் முதல்நபர் பொன்சேகா ஆவார். அரச நிகழ்வுகளில் இராணுவ சீருடையில் பங்கேற்றல் உட்பட பல சிறப்புரிமைகள் இருக்கின்றன.

ஆனால், பொன்சேகாவுக்கும், ஜனாதிபதிக்குமிடையே தற்போது மோதல் வெடித்துள்ளது. இருவரும் பகிரங்கமாகவே விமர்சனக்கணைகளைத் தொடுத்துக் கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆட்சியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமைக்கு 19 ஆவது அரசமைப்புத் திருத்தமே காரணம் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

19 ஆவது அரசமைப்புத்திருத்தத்துக்கு ஆதரவாக நாமும் வாக்களித்துள்ளோம். அதனை நினைத்து தற்போது கவலையடைகின்றோம். இதில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதகமான மாற்றங்களின் காரணமாக இன்று பொதுமக்களே பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

19 ஆவது திருத்தத்தின் மூலம் மக்களின் ஜனநாயகம் பாதுகாக்கப்படும் என்ற எதிர்பார்ப்பிலேயே நாம் வாக்களித்தோம். ஆனால் அது தற்போது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. மக்களின் வாக்குரிமை மீறப்பட்டுள்ளது.

அடுத்த தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெரும்பான்மை அதிகாரத்தைக் கைப்பற்றினால் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் மீளவும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் –என்றார். (ஐ)

## சர்வதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சிறிசேன அடம்பிடிக்கின்றார். இது அவரின் சர்வாதிகாரப் போக்கின் உச்சநிலையைத் தொட்டுக் காட்டுகின்றது.

– இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது கடும் விசனத்துடன் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஞா.ஸ்ரீநேசன்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய கட்சிகள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தன. ஆனால், இந்தக் கட்சிகளுடன் கலந்துரையாடாமல் ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு எதிராகச் செயற்பட்டவர்களுக்குப் பதவிகளைக் கொடுத்து அலங்கரித்து சர்வாதிகாரப் போக்குடன் செயற்படுகின்றார் ஜனாதிபதி மைத்திரிபால. இதன் காரணமாகத் தமிழ் மக்கள் மத்தியிலிருந்த ஜனாதிபதியின் நன்மதிப்பு இன்று கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

சட்டவிரோதமான முறையில் ஜனாதிபதியால் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமர் மற்றும் அவர் தலைமையிலான அமைச்சரவைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. எனினும், ஜனாதிபதி தனது சர்வாதிகாரப் போக்கைக் கைவிடுகின்றார் இல்லை.

225 எம்.பிக்களும் ஒன்றாக இணைந்து நின்று கோரினாலும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் உள்ளவரை (ரணில் விக்கிரமசிங்க) பிரதமராக நியமிக்க முடியாது என்று ஜனாதிபதி அடம்பிடிக்கின்றார். இது அவரின் சர்வாதிகாரப் போக்கின் உச்ச நிலையைத் தொட்டுக் காட்டுகின்றது.

அத்துடன், வவுணதீவில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ள சம்பவமானது நாட்டில் மீண்டும் இனவாதத்தைத் தூண்டிவிடும் செயற்பாடாக நாங்கள் அச்சம் கொண்டுள்ளோம். மட்டக்களப்பு மாவட்ட மக்கள் அமைதியான சூழலில் வாழ்ந்தனர். ஆனால், திடீரென இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இதனால் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

திரைமறைவில் தமிழ் மக்களுக்குஎதிரானபிரச்சினைகளைத் தோற்றுவிக்கச் செய்யப்பட்ட சதி நடவடிக்கையாகவே வவுணதீவுச் சம்பவத்தை நாங்கள் சந்தேகிக்கின்றோம்.

அதேவேளை, முன்னாள் போராளிகள் இன்று கைதுசெய்யப்படுகின்றனர். இந்த நிலைமை மாற வேண்டும். முன்னாள் போராளிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் – என்றார்.

# இரணைமடுக் குளத்து நீரை மைத்திரி திறந்துவிடுவாராம்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



கிளிநொச்சி, டிசெ. 06

இரணைமடுக் குளம் வான் பாயும் நிலையை அடைகின்றபோது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக ஜனாதிபதியை அழைத்து வந்து திறப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படும் என வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

கிளிநொச்சி இரணைமடுகுளத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2178 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு தற்போது இரண்டு வருடங்களின் பின் குளத்தின் நீர் கொள்ளளவு முழுமை யை எட்டியுள்ள நிலையில் ஆளுநர் றெஜினோல்ட் குரே விஜயம் செய்து நிலைமைகளை நேரில் ஆராய்ந்தார்.

இது குறித்து ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரி வித்த ஆளுநர், தற்போது குளத்தின் நிலைமைகளைப் பார்வையிடுவதற்காவே வருகை தந்துள்ளேன். குளத் தின் நீர் மட்டம் அதன் வான் பாயும் அளவை இன்னமும் அடையவில்லை. எனவே இது தொடர்பில் மாவட்ட அரச அதிபருடன் இணைந்து நீர்ப்பாசனத்திணைக்களத்தின் அறிவித்தல்களைப் பெற்று அதற்கமைவாக ஜனாதி பதியை அழைத்து வந்து திறப்பதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படும் – என்றார். (ஐ)

# வாள்வெட்டுக் கும்பல் அட்டகாசம் தலைதெறிக்க ஓடிய வர்த்தகர்கள்

வவுனியா, டிசெ. 06

வவுனியா – வேப்பங்குளம் 7 ஆம் ஒழுங்கைக்கு முன்பாக, நேற்று முன் தினம் இரவு 8.30 மணி தொடக்கம் வாள்வெட்டு குழுவொன்று அட்டகாசத்தில் ஈடுபட்டது. இதனால், வர்த்தகர்கள் தமது கடைகளை மூடிவிட்டு ஓடினர்.

வேப்பங்குளம் சிறுவர் இல்லத்திற்கு முன்பாக அமைந்துள்ள வர்த்தக நிலையத்திற்கு அருகே நேற்று முன் தினம் இரவு 8.20 மணி தொடக்கம் 9.30 மணி வரை சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக வாள்வெட்டு குழுவொன்று அட்டகாசத்தில் ஈடுபட்டது.

இவர்களின் நடவடிக்கையால் அச்சமடைந்த வர்த்தகர்கள் கடைகளை மூடிவிட்டுச் சென்றனர்.

இவ்விடயம் தொடர்பாக 8.30 மணிக்கு பொலிஸ் தமிழ் மொழி மூல முறைப்பாட்டுப் பிரிவுக்கு தகவல் வழங்கிய போதிலும் 9.40 மணியளவிலேயே சம்பவ இடத்துக்கு பொலிஸார் வருகை தந்திருந்தனர்.

சுமார் ஒன்றரை மணிநேரம் கழித்துச் சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வருகை தந்தமை தொடர்பில் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (ஐ)

# ஐ.தே.முன்னணிக்கான ஆதரவு மிக அவசரப்பட்டு எடுத்த முடிவு



## சிவாஜிலிங்கம் பாய்ச்சல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 06

ஐக்கிய தேசிய முன்ன ணிக்கு ஆதரவு வழங்குவது என்ற முடிவு கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளுடன்சேர்ந்து எடுத்த முடிவு இல்லை. அது அவசரப்பட்டு எடுத்த முடிவு.

– இவ்வாறு சாடினார் வடக்கு மாகாண சபை முன் னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் –

ஐ.தே.முன்னணிக்கு ஆதரவு வழங்கவது என்பது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கூடும் ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டத்தைக் கூட்டமாமல் எடுத்த முடிவுதான். அது அவசரப்பட்டமுடிவாகவே நான் கருதுகின்றேன்.

இதனால்தான் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ் மக் களின் அடிப்படைத் தேவைகள் தொடர்பான 5 அம் சக் கோரிக்கைகளை முன்வைக்கவேண்டும் என்று ரெலோ அமைப்பின் சார்பில் கோரியுள்ளோம் – என் றார். (ஐ – 07)

# ஜனவரி முதல் அரச நிறுவனங்கள் இயங்க முடியாத நிலை ஏற்படும்

## ரவி கருணாநாயக்க எச்சரிக்கை



ஜனவரி முதல் அரச நிறுவனங் கள் இயங்க முடியாத பெரும் பிரச் சினை ஏற்படும் அபாயம் காணப் படுவதாகச் சுட்டிக்காட்டிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கரு ணாநாயக்க, விரைவில் இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தை நாடாளு மன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அடுத்த வருட அரச செலவுக ளுக்கான நிதியை நாடாளுமன்றமே ஒதுக்கவேண்டும். ஆனால் இந்த வருடம் நிறைவடைய இன்னும் சில வாரங்களே இருக்கின்றன. அதில் 16 நாள்களே நாடாளுமன்றம் இடம் பெறவுள்ளது.

ஆனால் இதுவரை அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப் பிக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் எவ்வாறு அடுத்த வருடத் துக்குநிதியைஒதுக்கப்போகின்றோம்?

அத்துடன் எதிர்வரும் 16 நாள்க ளுக்குள் அடுத்த வருடத்துக்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ள நடவ டிக்கை எடுக்காவிட்டால் ஜனவரி முதல் அரச நிறுவனங்கள் இயங்க முடியாத பெரும் பிரச்சினை ஏற்படும் அபாயம் இருக்கின்றது.

அதனால் எஞ்சியிருக்கும் சில தினங்களில் இடைக்கால வரவு – செலவுத் திட்டம் ஒன்றையேனும் சமர்ப்பித்து நாடாளுமன்றத்தின் அங் கிகாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவ டிக்கைஎடுக்கப்படவேண்டும்–என்றார்.

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

NOTICE

Reference to the advertisement for vacancies appeared in this paper on 05.12.2018. Please note the correction in the Salary Scale for the post of Project Manager – Construction Works and Chief Marshal to be read as follows;

1. PROJECT MANAGER – CONSTRUCTION WORKS

**Salary Scale :** U-EX 2(II) - Rs. 66,180 – 8x1,335; 8x1,630 – 89,900p.m. (as at 01.01.2020)

2. CHIEF MARSHAL

**Salary Scale :** U-EX 2(II) - Rs. 66,180 – 8x1,335; 8x1,630 – 89,900p.m. (as at 01.01.2020)

**Regret any inconvenience caused.**

REGISTRAR
05.12.2018

# ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவரைச் சாடிய சபாநாயகர்

கொழும்பு, டிசெ. 06

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தின் தலைவர் தன்னிச்சையாக செயற் படுகிறார் எனச் சபாநாயகர் கரு ஜயசூரிய குற்றம் சுமத்தியுள்ளார்.

சபையில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே சபாநாயகர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற நேரடி ஒலிபரப்பு களுக்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்துக்குப் பணம் கொடுக்கப்பட்டுள் ளது. அதற்கமைய நாடாளுமன்ற நேரடி ஒலிபரப்புகளை மேற்கொள்ளுமாறு 3 சந்தர்ப்பங்களில் அறிவித்தபோதிலும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலை வர் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என சபாநாயகர் சுட்டிக்காட்டினார். (ஐ)

**Golden Eagle.K.T.(Pvt) Ltd**

**பதவி வெற்றிடங்கள்**

01. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் – ஆண்
02. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் – பெண்
03. சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் – ஆண்
04. பாதுகாப்பு மேற்பார்வையாளர்கள் (வவுனியா) – ஆண்

மாவட்டம்: யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா

**வயதெல்லை**

20 – 55 (நல்ல கண்பார்வையும் தேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்)

**நேர்முகத்தேர்வு:**

**17.12.2018, 18.12.2018 மற்றும் 19.12.2018**

**ஆவணங்கள் (முக்கியம்) :**

கிராம அதிகாரியின் நற்சான்று, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கா.பொ.த (சாத), தே.அ.அட்டை

**758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பணிப்பாளர்**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.